www.tamilarangam.net

# சுவடுகள்



**யுத்தத்தை நிறுத்து!**

**சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!!**

www.tamilarangam.net

# அமெரிக்க ▪ ஆபிரிக்கக் கவிதைக

## தமிழில் எஸ். சண்முகம்

## லாங்ஸ்டன் ஹியூக்ஸின் மூன்று கவிதைகள்

### 1. ஆப்ரிக்கா

தூங்கும் ராட்சதனே,
நீ இப்பொழுது ஓய்வெடுத்துக்
கொண்டிருக்கிறாய்.

நான்
இடியை மின்னலை
உன் புன்னகையில் காண்கிறேன்.

நான்
உன் திறக்கும் விழிகளில்
புயல் மேகங்களைப் பார்க்கிறேன்.

இடி
அதிசயம்
புதிய ஆச்சரியம்.

உன் ஒவ்வொரு அடியிலும்
ஒரு புதிய தாவலை
உன் கால்கள் காட்டுகின்றன.

### 2. நானும் கழுதையும்

என்னுடைய பழைய கழுதை முகத்தில்
ஒரு அசட்டுச் சிரிப்புள்ளது.
இத்தனை நாள் கழுதையாகவே இருந்தது
தன் இனத்தை மறந்து.
கழுதையைப் போலத்தான் நானும்,
கருப்பன் - என்னைச் சபிக்காதே.

எப்படி இருக்கிறேனோ
அப்படியே ஏற்றுக்கொள்.



### 3. அமெரிக்காவில் அகதிகள்

இங்கேயும் சுதந்திரம் போன்ற வார்த்தைகள் உண்டு.
இனிமையும், அதிசயமாயும் இருக்கும் உச்சரிக்க.
என் இதயத்தினுள் சுதந்திரத்தின் நாம்புகள் பாடுகின்றன
எந்நாளும் எப்போதும்.

இங்கேயும் விடுதலை போன்ற வார்த்தைகள் உண்டு.
அவை என்னை எறக்குறைய அழவைக்கின்றன.
உங்களுக்கு நான் அறிந்தது தெரிந்தால்
நான் அழுவது
ஏனென்று புரியும்.

## விழும்பனியில்

### ரிச்சார்ட் ரைட்

விழும் பனியில்
சிரிக்கும் பையன்.
நீட்டிக் கொண்டிருக்கிறான்
தன் கைகள் வெள்ளையாகும்வரை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திக்கின்றோம்.




புலம் பெயர்ந்து வாழும் இசையார்வம் மிகுந்த ஈழத்தமிழர்களின் கூட்டு முயற்சியில் ஒஸ்லோ மாநகரில் ஏறக்குறைய ஏழு ஆண்டுகளாய், முனைப்போடு பணியாற்றிவரும் "THE ROOTS" இசைக்குழுவினரை அவர் தம் ஒத்திகைக் கூட்டத்தில் முதன்முறையாகச் சந்திக்கின்றோம். சம்பிரதாய பூர்வமான அறிமுகத்தினைத் தொடந்து வாசகர்களின் சார்பிலேயே கேள்விகளைத் தொடுத்தோம். பதில்கள் பரவலாக வந்தன, அவற்றின் தொகுப்பே இவை:

சுவடுகள்:
1987ம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் உங்களுடைய இசைக்குழு, மூன்று அல்லது நான்கு கலைஞர்களுடன் தான் ஆரம்பிக்கப்பட்டதாக அறிகிறோம். உங்களுடைய முதல் நிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்கள், அந்நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்து தந்தவர்கள் போன்ற விபரங்களைக் கூற முடியுமா?

றூட்ஸ் :
எம்முடைய இசைக்குழு 1987ம் ஆண்டு கோடைவிடுமுறையின் போதுதான் தன்னுடைய நிகழ்ச்சியினை "ROOTS" என்ற பெயர் இல்லாமல் வழங்கியது.

www.tamilarangam.net

அந் நிகழ்ச்சியில் சுந்தர், ஜெயதாஸன், சுதாகர், தவராஜா, ஆதித்தன் மட்டுமே கலந்து கொண்டனர். ஆனால் "THE ROOTS" என்ற பெயருடன் எங்களுடைய முதல் நிகழ்ச்சியினை 'சுவடுகள்' சஞ்சிகையின் ஆரம்ப விழாவில் 1988ம் ஆண்டில் தான் வழங்கினோம். இந்நிகழ்ச்சியில் சுந்தர், சபா, டொலி, கிருபாகரன் ஆகிய நால்வர் தாற் பணியாற்றினார்கள். அந்த நிகழ்ச்சியினை நொஸ்க் தமிழ் மக்கள் இணைவு கூடத்தில் அப்போது அங்கத்தவராக இருந்த திரு.சபா அவர்கள் தான் ஏற்பாடு செய்து தந்தார்.

> *தென்னிந்தியப் பாடல்களை எமது நிகழ்ச்சிகளில் குறைக்க வேண்டிய நிலை தற்போது எழுந்துள்ளதை மறுப்பதற்கில்லை. ஆனால் இதனை இந்திய எதிர்ப்பு என்பதை விட எமது படைப்புகளை மக்களின பார்வைக்குக் கொண்டுவரும் முயற்சி என்று தான் சொல்ல வேண்டும்.*

சுவடுகள்:
முழுக்க முழுக்க தமிழ் இசைக்கலைஞர்கள், தமிழ்த்திரைப்படப் பாடல்கள் அல்லது தமிழ் மெல்லிசைப்பாடல்களை முதன்மைப்படுத்திய உங்கள் இசைக்குழுவிற்கு ஏன் "THE ROOTS" என்ற ஆங்கிலப் பெயர் சூட்டப்பட்டது?

றூட்ஸ் :
சபா என்ற இசைக்கலைஞர் தான் "THE ROOTS" என்ற பெயரினை எமது குழுவிற்குத் தேர்வு செய்து தந்தார். மேலும் "ROOTS" என்னும் பதத்தினைத் தமிழில் மொழிபெயர்த்தால் வேர் என்று பொருள்படும். எனவே தான் எமது இசைக்குழுவும் இந்த மண்ணில் வேரூண்ட வேண்டும் என்ற எண்ணத்தில் அப்பெயர் அங்கீகாரம் பெற்றது.

சுவடுகள்:
முழுக்கத் தமிழ் இசைக்கலைஞர்கள் அங்கத்துவம் பெறும் இசைக்குழுவிற்கு ஏன் ஓர் ஆங்கிலப் பெயர் சூட்டப்பட்டது என்பதே வாசகர்களின் சந்தேகம்?

றூட்ஸ் :
உண்மையில் ஓர் இசைக்குழுவினை இங்கு வாழும் கலைஞர்களை இணைத்து ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாகக் குழுவிற்குத் தேர்வு செய்தபெயரில் போதிய அக்கறை செலுத்தவில்லை என்று தான் கூற வேண்டும். மேலும், எமது இசைக்குழுவினைச் சார்ந்த பலர் தாயகத்தில் கூட பல இசைக்குழுக்களில் அங்கம் வகித்துள்ளோம். அவை கூட ஆங்கிலப் பெயர்கள் கொண்ட தமிழ் இசைக்குழுக்கள் என்பதால் எமது இசைக்குழுவிற்கும் ஓர் ஆங்கிலப் பெயரே சூட்டப்பட்டது.

சுவடுகள்:
ஈழப் போராட்டத்தின் பின் விளைவாக இன்று உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பு அல்லது இந்தியக் கலைஞர்களின் புறக்கணிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக அல்லது திணிக்கப்பட்டிருப்பதாக உணருகின்றோம். இக்கருத்தினை உங்கள் இசைக்குழு எந்த அளவிற்கு ஏற்றுக் கொள்ளுகின்றது?

றூட்ஸ்:
தென்னிந்திய திரையிசையினை அடிப்படையாகக் கொண்டே எம்முடைய இசைக்குழு தோற்றம் பெற்றதினாலும், கலைஞர்கள் எப்பொழுதும் ஒரு நடுநிலைத்தன்மையில் பணியாற்ற வேண்டியவர்கள் என்ற அடிப்படையிலும் எம்முடைய இசைக்குழுவில் இதுவரை இப்படியான எண்ணத்திற்கு ஆதரவு இல்லை. இருந்தும் பார்வையாளர்களின் ரசனையினை அறிந்து எமது படைப்புகளிற்கு இடம் இடம் கொடுக்கும் நோக்கில் தென்னிந்தியப் பாடல்களை எமது நிகழ்ச்சிகளில் குறைக்க வேண்டிய நிலை தற்போது எழுந்துள்ளதை மறுப்பதற்கில்லை. ஆனால் இதனை இந்திய எதிர்ப்பு என்பதை விட எமது படைப்புகளை மக்களின பார்வைக்குக் கொண்டுவரும் முயற்சி என்று தான் சொல்ல வேண்டும்.

சுவடுகள்:
கடந்த காலங்களில் ஒஸ்லோவில் இனித்துவமான இசைக்அகுழுவாக இயங்கிய

www.tamilarangam.net

நீங்கள் தற்போது அந்நிலையினை இழந்திருப்பதாகவே தென்படுகிறது. அதாவது முன்னர் போல் அல்லாமல் வேறு இசைக்குழுக்கள், இசைக்குழுக்களுக்கு இணையான தனி இசையாளர்கள் தற்போது தோற்றம் பெற்றிருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். இது பற்றி உங்கள் கருத்தென்ன?

றூட்ஸ்:

இக்கருத்தினை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளுகின்றோம். இப்படியான ஒரு நிலைப்பாட்டினால், எமது இசைக்குழு மேலும் வளர்ச்சியுறுவதற்கான வாய்ப்புக்கள் கிட்டியிருப்பதாகவே நம்புகின்றோம். 'கீரைக்கடைக்கும் எதிர்க்கடை போல' ஆனால் எமது இசைப்பிரியர்கள் இன்னும் எமது குழுவிற்கான ஆதரவினை முழுமையாக வழங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சுவடுகள்:

உங்களுடைய இசைக்குழு 1987ம் ஆண்டு முதல் இன்று வரை ஒஸ்லோவிலும் ஏனைய நகரங்களிலுமாக எத்தனை மேடை நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளது?

றூட்ஸ்:

ஏறக்குறைய கடந்த ஏழு ஆண்டுகளில் 45 நிகழ்ச்சிகள் வரை நடத்தியிருக்கின்றோம்.

சுவடுகள்:

உங்கள் இசைக்குழுவிற்குப் புதிய கலைஞர்களைத் தெரிவு செய்யும் போது அவர்களை எந்த அடிப்படையில் தேர்வு செய்கிறீர்கள்? திறமையா? சிபாரிசா?

றூட்ஸ்:

சிபாரிசு என்பது எமது இசைக்குழுவினைப் பொறுத்தமட்டில் அவசியமில்லாத ஒன்று. திறமை தான் முக்கியமானது. ஆனால் அத்திறமையினை நாம் உணர்வதற்காக ஓர் அறிமுகம் தேவைப்படுகிறது.

(வரும்)

## ஒரு நாடோடி இசைப்பாடல்

மஹ்முத் தார்வி

(தமிழில்: மணி)

தெளிவானதொரு வீதி,
நிலவென்னும் விளக்கேற்றிப்
பெண்ணொருத்தி போகின்றாள்,
தேசமோ வெகு தொலைவில்,
தடயமிலா ஒரு தேசம்.

புளிப்பான ஒரு கனவு.
கல்லினிலே ஒரு இடுப்பைக்
குரலொன்று செதுக்குகிறது.
என் கண்ணின் இமைமீதோ
யாழ்நரம்புகளின் மீதோ
சென்றுவிடு, என் அன்பே.

கொன்றுண்ணும் ஒரு நிலவு.
காற்றினையும் மழையினையும்
முறிக்கின்ற மோனமோ
மரம் இழைக்கும் ஊசியாய்
மாநதியை மாற்றிடுது.

www.tamilarangam.net

# புரியாத புண்ணியம்

வேலணையூர் நவமகன்



அன்று
புரட்டாசிச் சனிநாள்
அன்றைகளில் நானோர்
அரைக்கால்ச் சட்டை

வெறுவயிற்றுப் பசியோடு
மாமரத்தின் கீழான
மதிற்கட்டில் உட்கார்ந்து
ஊரழகை உள்ளெடுத்தேன்.

மனிதர் வாழ்கூடுகளில்
புகைக்கூட்டுத் துளிர்முகில்கள்
வானத்தைத் தொட்டேறும்

நோன்பென்று கூடுகளில்
முடங்க மனிதரெல்லாம்
மனித நடமாட்டம்
மறந்த தெருக்கள்
மல்லார்ந்து கிடக்கும்

ஊரின் காகங்கள்
கூடுகின்ற மலைவேம்பை
அண்டிய தெருமுனையில்
தேனீர்க் கடையொன்று
திறந்துகொண்டே தூங்கும்

மலைவேம்பின் பக்கத்தாய்
ஊறப்போட்டு வைத்த
பழைய பாத்திரங்கள்
ஒட்டி வைக்கும் பருக்கைகளால்
தினமும் காகங்கள்
இரைப்பைகள் நிறைக்கும்

வெளிச்சுவரின்
தொட்டியொன்றில்
எச்சிலைகள் வந்து விழும்
தோலால் மூடுண்ட
எலும்புக் கூட்டுடம்போடு
தினமும் ஓர் மனிதன்
அதற்குள் தலைவிடுவான்.

அன்றும் அப்படித்தான்
வழமைபோல் நிகழ்வு.

அடுப்பங்கரையிலிருந்து
அம்மா வெளிவந்தா
வெண்குறிகள் இழுத்த கையில்
வெள்ளித் தட்டு ஏந்தி.

கா.... கா.... என்று கத்தி
கருணையுடனழைக்க
மலைவேம்புக் காகங்கள்
மனமின்றித் தலையசைத்து
ஓரக் கண்ணெறியும்

பச்சரிசிச் சோறும்
பல்வகை மரக்கறியும்
பக்குவமாயேந்தி
பச்சைப் புல்த் தரையில்
வெள்ளித் தட்டிருக்கும்

மலைவேம்புக் காகங்கள்
மனமின்றித் தாவி..
வந்து விழுந்து தட்டில்
கொத்திக் கிளறித்
துள்ளி விளையாடும்

புண்ணியம் கிடைத்துவிட்ட
பூரண திருப்தியுடன்
நோன்பு கலைக்கவென
அடுப்பங்கரை நுழைந்தோம்

இன்னமும்
அம்மனிதன்
எச்சிலைத் தொட்டியுடன்
போதாத வயிற்றுக்காய்
போராடிக் கொண்டிருக்க.....




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தேசத்தின் குறிப்புகள்

**சங்கிலியன்**

# தோல்வியல்ல, பின்னடைவே!




*கடந்த ஒக்டோபர் 17ம் திகதி இலங்கையின் சிங்கள பேரினவாத ராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட 'சூரியக்கதிர்' எனும் ராணுவ ஆக்கிரமிப்பு இந்த நூற்றாண்டில் இலங்கைத் தீவில் நிகழ்ந்த மிகப் பெரிய ராணுவ நடவடிக்கை என வர்ணிக்கப் படுகிறது. இந்த ஆக்கிரமிப்பின் விளைவுகள் முன்பு நிகழ்ந்த எல்லா ராணுவ நடவடிக்கைகளையும் விட அதிக விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் படையெடுப்பானது சிங்களப் பேரினவாதத்தை தமிழர் மீது நிறுவுவதேயன்றி வேறொன்றுமல்ல.*

இந்த நடவடிக்கையின்போது பலநூறு தமிழர்கள் விமானக் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல்களில் பலியாகியுள்ளனர். உயிரிழந்த ராணுவத்தினரது எண்ணிக்கை ஆயிரத்துக்கு மேல் எனவும், உயிரிழந்த விடுதலைப் புலிப் போராளிகளது எண்ணிக்கையும் ஆயிரத்துக்கு மேல் எனவும் ஊகிக்கப் படுகிறது. உண்மையான எண்ணிக்கை இரு தரப்பிலும் மறைக்கப் பட்டதாகவே செய்தியாளர்கள் கருதுகின்றனர். ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ்ப்பிரதேசங்களில் தன்னைப் பாதுகாப்பாக நிலைநிறுத்த ராணுவம் வீடுகள், கட்டிடங்களை அழித்துத் தரைமட்டமாக்கி வருகிறது.

இந்த நடவடிக்கையில் மிக முக்கியமானது பல லட்சம் மக்கள் அகதிகளாக ஆகியுள்ளமை. தமிழரது வரலாற்றில் ஒரே இரவில் இத்தனை லட்சம் அகதிகள் முன்னெப்போதும் உருவாக்கப் பட்டதில்லை. பாரிய தொகை அகதிகள் சர்வதேசத்தின் கவனத்தைச்ச ற்றே ஈழத்தின் பக்கம் திருப்பின. ராணுவ ஆக்கிரமிப்புகளின் போது மக்கள் அதிகளவில் இடம்பெயர்வது வழக்கமானது.

இம்முறை ராணுவம் வடபுலத்திலிருந்து ஊரெழு, நீர்வேலி ஊடாக தெற்குப் புறமாகப் புறப்பட்டுள்ளது. முன்னையைப் போலல்லாது மெதுவாகவும், உறுதியாகவும் முன்னேற

www.tamilarangam.net

முற்பட்டது. 1987ல் இந்திய ராணுவம் கையாண்ட அதே வழியையே இம்முறை இலங்கை ராணுவம் கையாண்டதாய்க் கூறப்படுகிறது. அதாவது பாதையினூடாகவே முன்னேறிய இந்திய ராணுவம் போராளிகளிடம் இருந்து யாழ்க் குடாநாட்டை ஆக்கிரமித்துக் கொண்டது. இலங்கை ராணுவம் இதே வழியைக் கையாண்டது. (இதேவேளை சில இந்திய ராணுவ ஆலோசகர்கள் பலாலியில் தங்கியிருந்து ஆலோசனை வழங்கி வருவதாக உறுதிப்படுத்தப் படாத செய்திகள் கூறின.) இந்திய ராணுவம் போலவே நிமிடத்திற்கு ஐம்பது ஆட்டிலறி செல்களை வீசிக்கொண்டே ராணுவம் முன்னேறியதாகக் கூறப்படுகிறது.

செறிவான செல் தாக்குதல்கள் பாரிய இழப்புகளை ஏற்படுத்தும் என்பதால் நேரடியாக எதிர்த்து நின்று போராடுவது ஆபத்தானது. பல தொடர்ச்சியான தாக்குதல்களை வெற்றியாக்கிய விடுதலைப் புலிகள் மணலாறு தாக்குதலில் 160பேர்வரை பலி கொடுத்ததுடன் இலக்கை அடையாமலே திரும்ப நேர்ந்தது. பின்னரும் சில துரதிர்ஷடவசமான பாரிய இழப்புகளைச் சந்தித்துள்ளனர்.

ஆயினும் இம்முறை முன்னர் போலன்றி விடுதலைப் புலிகள் மட்டுப்படுத்தப்பட்ட யுத்தத்தில் ஈடுபட்டது போற் தெரிகிறது. அதிக உயிரிழப்புகளைத் தவிர்ப்பது நோக்கமாய் இருக்கக்கூடும் இதன் மூலம் யாழ் நகர, வலிகாமப் பகுதிகளில் இருந்து வெளியே நேர்ந்தாலும் தமது இருக்கும் பலத்தைத் தக்க வைப்பதன் மூலம் மீளவும் இயக்கத்தைப் பலமாகக் கட்டி எழுப்பப்புலிகள் நினைத்திருக்கக் கூடும்.

ஆயினும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புலிகள் திட்டமிட்டே அகதிகள் வெள்ளத்தை ஏற்படுத்தினார்கள் என்ற விமர்சனம்/ குற்றச்சாட்டே பெரும்பாலும் முன்வைக்கப் படுகிறது. இதில் கடந்த சில வருடங்களாகத் தமிழர் தொடர்பான அனுதாப அலை குறைந்து வருவதைச் சரிக்கட்டவே மக்களைக் குடிபெயரச் செய்வதாய்க் கூறப்படுகிறது. ஆயினும் இதில் புலிகளின் பங்கு உண்டோ இல்லையோ, பொதுவாக மக்கள் போர்ச் சூழலில், அதுவும் இலங்கை ராணுவம் ஆக்கிரமிக்க வருகையில் குடிபெயர்வது வழமையான ஒன்றாகும். ஆயினும் எமக்கு இன்றைய சூழலில் அனுதாப அலையை விட ஆதரவுக் கரங்களே தேவையாகும். இன்றைய நிலையில் யாழ் குடாநாட்டினைப் பேரினவாத ராணுவம் ஆக்கிரமிப்பதால் தமிழர்களது உரிமைப்போர் பின்தள்ளப்படும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆயினும் இது புலிகளுக்கோ, தமிழர்களது உரிமைப் போருக்கோ தற்காலிகப் பின்னடைவே அன்றி, இலங்கை அரச பிரசாரம் செய்வது போல், மீள முடியாத தோல்வி அல்ல.

இராணுவம் ஆக்கிரமிப்பால் விடுதலைப் புலிகள் ஒரு நிரந்தரத் தளப் பிரதேசத்தை இழப்பதால் தேவையான வளப் பற்றாக்குறை ஏற்படுகிறது. நிர்வாக, பொருளாதார நிர்மாணங்கள் தடைப் பட்டுள்ளன. பொருளாதார நிர்மாணத்தை ராணுவம் அழிக்கும். இது இன்னொரு பத்து வருடப் பின்னடைவை ஏற்படுத்தும்.

இராணுவம் வலிகாமம் பகுதியை ஆக்கிரமித்ததன் மூலம் இராணுவமும், சிங்கள அரசும் மனோரீதியான பலத்தை ஈட்டியுள்ளன. இந்த ராணுவ வெற்றியானது, விடுதலைப் புலிகள் 'பலமற்றவர்கள்' என்று வெளிநாடுகளிலும், உள்நாடுகளிலும் பிரச்சாரம் செய்ய உதவும். இதை எழுதிக்கொண்டிருக்கும்போது, யாழ்நகரில் காலடி வைத்துவிட்டோம் என்று மீண்டும் (எத்தனையாவது தடவையோ) அறிவிக்கும் ராணுவம், யாழ்நகரில் சிங்களக் கொடியை ஏற்றி வைத்தாலும், இந்த வெற்றி சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு இன்னும் உரமூட்டி அதன் நிழலில் வெறியாட்சி நடத்த இந்த மக்கள் விரோத அரசுக்கும்) இன்னும் பல ஆண்டுகள் வாய்ப்பளிக்கக் கூடும். ஆனால் தமிழர் "மனங்களை வெல்ல"வோ, இனப் பிரச்சனையைச் சுமுகமான வழிகளில் தீர்த்து, நாட்டின் பொருளாதாரச் சீரழிவைத் தடுத்து நிறுத்தவோ இந்தக் கொடியேற்றல் உதவாது. சிங்கள மக்களது பொருளாதாரப் பிரச்சனைகளையும் கொடியேற்றல் தற்காலிகமாகக் கண்ணிலிருந்து மறைத்துவிடும்.

யுத்தத்தின் முதற் பலி உண்மைதான் என்பதுபோல், இன்று பல விடயங்கள் தணிக்கை மூலம் மூடி மறைக்கப் படுகின்றன. இருதரப்பினருமே கடும் தணிக்கையை நடைமுறைப்படுத்தி உள்ள போதிலும், அரசின் தணிக்கை முறை தமிழின அழிப்பிற்கு முற்றாகப் பயன்படுகிறது. தமிழின அழிப்பிற்குத் துணையாகப் பிரச்சாரப் போரிலும் சந்திரிகா அரசு பலபடி மேலேயே உள்ளது. அரசின் பிரச்சாரத்தையே செய்திக்காக நம்பியிருக்க வேண்டிய நிலையில் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் உள்ளன. கடும் தணிக்கையும், செய்தியாளர்கள் பல விதங்களில் தொல்லைப்படுத்தப் படுவதும், கொழும்பில் வாழும் வெளிநாட்டுச் செய்தியாளர் எவரும் வடபகுதிக்குச் செல்ல அனுமதி மறுக்கப் பட்டிருப்பதும் அரசுக்குச் சாதகமான நிலைமைகள். இது அரசுக்குத் தற்காலிக பிரச்சார



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெற்றியை அளித்துள்ளது. அரசின் இந்தக் கீழ்த்தரமான செயற்பாட்டுக்குக் களம் அமைத்துத் தருவது போல நம்மவர் சிலரது செயற்பாடுகள் அமைந்திருப்பது கவலை தருவது. நியாயத்திற்கான தமிழரின் போராட்டத்தைப் பயங்கரவாதமாகக் காட்ட மாறிமாறி வந்த சிங்கள அரசுகள் கடும் முயற்சி எடுத்து வருகின்றன. அண்மையில் அடுத்தடுத்துக் கிழக்குப் பகுதியில் சிங்களக் கிராமங்களில் சாதாரண பெண்கள், குழந்தைகள் உட்படப் பலரை வெட்டிக் கொன்றதை அரசு தனக்குச் சாதகமாக்கி வெளிநாடுகளில் தாராளமாகப் பிரசாரம் செய்கிறது.

இந்தச் சிங்கள மக்கள் மீதான படுகொலைகளின் நோக்கங்களாக, வடபகுதியில் அரசின் படையெடுப்பை நிறுத்துவதற்கான அழுத்தமாகவும், தென்பகுதியில் ஒரு இனக்கலவரத்தை உண்டாக்கி அதன் மூலம் தமிழருக்குச் சாதகமான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்காகவும் என்று ஊகங்கள் கூறப்படுகின்றன.

***இன்றைய இக்கட்டான சூழலில் போராட்டத்தின் தலைமைப் பாத்திரத்தைக் கொண்டுள்ள விடுதலைப் புலிகள் பின்வரும் சூழல்களைக் 'கவனத்திற் கொள்ளவில்லையோ எனத் தோன்றுகிறது.***

1. சந்திரிகாவின் அரசியற் தோற்றம் (உலக ரீதியிற் சமாதானப்புறாவாகக் காட்டப்படும் நிலை)

2. சந்திரிகா அரசினதும் முன்னைய (பிரேமதாசா) அரசினதும் அரசியல், ராணுவச் செயற்பாடுகளை ஒரே வகையாகக் கருதியமை. (இன்றைய அரசியல், ராணுவத் தந்திரோபாயம் முன்னையதைவிடப் பாரியளவில் மாற்றமானது)

## *இப்படியும் விடுதலைகள்!*

*ஈழத்திற் சிங்களப் பேரினவாத இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்துப் பல தமிழ் அமைப்புகள் நோர்வேயில் வெவ்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடத்தினர் ஊர்வலம் ஒன்று பற்றி அறிவித்தல் விட்டிருந்தனர். இதுபற்றிய துண்டுப் பிரசுரம் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்தது. ஒஸ்லோவின் தமிழ் வியாபார நிலையம் ஒன்றில் இந்தப் பிரசுரம் சில (தமிழ்) விசமிகளால் கிழித்து எறியப்பட்டது. இத்தகைய செயற்பாடுகள் தனிநபர்களாலோ, குழுக்களாலோ - யாராற் செய்யப்பட்டிருப்பினும் கண்டிக்கப்பட வேண்டியது.*

*இத்தகைய செயற்பாடுகள் சமூக முன்னேற்றத்துக்கோ எமது தேச விடுதலைக்கோ முரணான விசயங்கள் ஆகும். கருத்தைக் கருத்தால் சந்திக்கும் சமூகத்தால் மட்டுமே தன்னைத் தளைகளில் இருந்து விடுவிக்க முடியும்.*

*இதுபோன்ற, எமது சமூகத்தைப் பாதிக்கும் சம்பவங்கள் கடந்த காலங்களில் இங்கு நடைபெற்றுள்ளன. ஆனால் இத்தகைய சம்பவங்களைத் தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடமும் சுவடுகளும் மாத்திரமே கண்டித்து வந்துள்ளன. ஏனைய அமைப்புகள் மௌனம் சாதிப்பதன் மூலம் சமூகத்தைச் சீரழிக்கும் சம்பவங்களுக்குத் துணைபோகின்றன.*

*ஒவ்வொரு தனிநபரும், அமைப்புகளும் சமூகப் பொறுப்புடன் நடப்பது அவசியம். இத்தகைய செயற்பாடுகள் இல்லாதொழிக்கப் படுகிறபோதே தமிழ்ச் சமூகம் தலைநிமிரும்.*

**சுவடுகள்**

www.tamilarangam.net

3. ஐதேக அரசுக்கும், தற்போதைய அரசுக்கும் இந்தியாவுடனான நெருக்கமும், உறவும் ஒரே வகையானதல்ல.

4. தற்போதைய இந்திய அரசின் உலக ரீதியான மற்றும் இலங்கை தொடர்பான கண்ணோட்டம்.

5. தமிழகத்தில் ஏறத்தாழ முடக்கப் பட்டுவிட்ட ஈழத்தமிழர் ஆதரவுப் போக்கு.

6. உலக நிலைமையும், இலங்கை தொடர்பாக உலக நாடுகளின் கண்ணோட்டமும் (பேச்சுவார்த்தை முறிவின் பின் அதிக ஆயுத உதவி வழங்கும் நிலை)

7. அயல்நாட்டு உதவியும், பின்தள உதவிகளும்.

8. தமிழர் தொடர்பான அரசின் மனித உரிமை மீறல்களையோ, ஏனைய ஒடுக்குமுறைகளையோ உலக அரங்கில் பிரச்சாரம் செய்யும் நிலையில் (1987க்குமுன் இருந்தது போல்) இந்தியா இல்லை. உதாரணமாக ஐந்து லட்சம் அகதிகள் உருவானபோதும் அது பற்றிய செய்தி, படங்கள் வருவதில்லை. ராணுவத்தின் முன்னேற்றம் அடிக்கடி படமாக வந்து போகிறது. இவற்றுக்கு அப்பால் விடுதலைப் புலிகள் தமிழர்களின் ஆதரவு நிலை என்பதற்கு அப்பால் மக்களைப் போராட்டத்தில் இணைப்பதற்கான வேலைத் திட்டத்தை வகுக்காமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

**விடுதலைப் புலிகளின் தற்காலிகப் பின்னடைவினால் தங்களது கடந்த காலச் சரிபிழைகளை மீள எடைபோட வேண்டியது அடுத்த கட்ட நடவடிக்கைக்கு அவசியமானது.**

இவற்றில் குறிப்பாக,

1. இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்தல். இந்தியாவின் அகன்ற பாரதக் கொள்கையும், ஈழம் தொடர்பாகக் கடந்த காலங்களில் இந்தியஏ நடந்துகொண்ட முறையும் கடும் விமர்சனத்துக்குரியவை. தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமையை இந்தியா அங்கீகரிக்கும் போது, தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு மேம்படும்.

2. முஸ்லீம் மக்கள் மீதான பாரபட்ச நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி, மீளப் பெறுவதுடன் அவர்களது சுயாதிபத்தியத்தையும் சுயநிர்ணய உரிமையையும் நிபந்தனையின்றி அங்கீகரிப்பதன் மூலமும் எமது போராட்டத்துக்கு ஆதரவான நிலையை அவர்கள் எடுக்கவைக்கத் தூண்ட முடியும்.

3. இலங்கையில் சிங்களப் பேரினவாதத்தால் ஒடுக்கப்படும் அனைத்துச் சிறுபான்மை மக்களையும் இணைத்துப் போராடுவதன் மூலம் எமது போராட்டத்தைப் பலமடையவும், அரசைப் பலமிழக்கச் செய்யவும் முடியும்.

4. விடுதலையின்பால் உறுதியாகவும், விடுதலைப் புலிகளின வழிமுறைகளில் முரண்பாடு/ கருத்து வேறுபாடும் கொண்ட தேசபக்தர்களை ஜனநாயக வழிகளில் இணைத்துப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான ஐக்கிய முன்னணித் திட்டத்தை வகுத்துச் செயற்படல்.

5. உண்மையான தேசபக்தர்கள், ஜனநாயகவாதிகள், மாற்றுக் கருத்துடையோரைத் தமது தடுப்புக் காவல்களில் இருந்து விடுவிப்பதன் மூலம் இவர்களும் போராட்டத்தில் ஆரோக்கியமான பங்களிப்பு வழங்க வாய்ப்பளித்தல்.

6. போராட்ட முன்னெடுப்பிற்காகக் கருத்துப் பரிமாற்ற சூழலை ஏற்படுத்துவதற்காக குறைந்தபட்ச ஜனநாயக சூழலை ஏற்படுத்தல்.

7. தேசிய விடுதலையுடன் சமூக விடுதலையை (எமது பிரதேசத்திற்கு உரிய வகையில்) இணைத்துப் போராட்டத்தை முன்னெடுத்தல். சமூக விடுதலையே தேசிய விடுதலையை நிறைவு செய்யும்.

8. எமது பிராந்தியத்தில் ஒடுக்கப்படும் தேசிய இன மக்களுடன்ஐக்கியத்தை வளர்த்தெடுத்தல்.


9. சிங்களப் பேரினவாத ஆளும் வர்க்கம் அடிப்படையில் சிங்கள மக்களையும் ஒடுக்கியே வருகிறது. இந்த ஒடுக்கப்படும் மக்களுடன் ஐக்கியத்தை ஏற்படுத்தல். அறிக்கைகளை வெளியிடுவதால் மட்டுமன்றி அரசுக்கு எதிரான செயற்பாட்டிலும் இவர்கள் தமது ஐக்கியத்தைக் காட்ட வேண்டும்.

10. தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சுயமாக வந்து வாழும் சிங்கள மக்களை (அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அல்ல) அமைதியுடன் வாழ அனுமதிக்கப்பட வேண்டும். இவற்றைக் கருத்திற் கொள்வதன் மூலம் மாத்திரமே விடுதலைப் புலிகள் விடுதலைப் போரைச் செழுமையாக்க முடியும். இந்நிலையில் ஆரோக்கியமான விமர்சனங்களை வடுதலைப் புலிகள் கருத்தில் எடுக்க வேண்டும் என்பதே தமிழ்ச் சமூகத்தின் பாரிய எதிர்பார்ப்பாகும். அவ்வாறே செய்வார்கள் என நம்புவோமாக.

**சிங்களப் பேரினவாத ராணுவத்தின் தமிழர் மீதான தாக்குதல்களையும், ஒடுக்குமுறைகளையும் எதிர்த்துச் சிங்கள மக்களும், தமிழ்க் குறுந்தேசியவாதப் போக்குகளையும், முஸ்லிம், சிங்கள அப்பாவிப்**

www.tamilarangam.net

பொதுமக்கள் மீதான படுகொலைகள் ஒடுக்குமுறைகளைத் தமிழ் மக்களும், முஸ்லிம் ஊர்காவற் படையினது தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களையும், முஸ்லிம்களது சந்தர்ப்பவாத அரசியற் தலைமைகளையும் முஸ்லிம் மக்களும் எதிர்த்துப் போராட முற்படும் போது மட்டுமே இலங்கையில் ஒரு நிரந்தர அமைதி ஏற்படும். இதுவே இன்றைய யதார்த்தம். இதற்காக அனைவரும் உழைத்தால் மட்டுமே இது சாத்தியம்.



## தமிழன்

வாடாத சரித்திரத்தில் வாழ்ந்து நின்றோம்
இன்று -

வையகம் ஒவ்வாத செயலுக்கு ஆளானோம்.
பொருள் கொண்டோம், பொன் கொண்டோம்
மாறாத மண்மீது உறவு கொண்டோம்.

கற்காலம் முறியடித்து பொற்காலம் கண்டோம்
'தமிழன்' என்ற கூட்டுக்குள் சிறைபட்டுக் கொண்டோம்
வானத்தைப் பார்த்துக் காதல் கவிதையைப் புனைந்தோம்
'ஆம்' அந்த நிலவினைப் பெண்மகளாய்ப் பார்த்தோம்

கொண்டோம் ஒரு புது சுதந்திர தாகம்;
அதில் மறந்தோம் அஹிம்சை கீதம்
வாழ்த்தியவன் தமிழன்; இன்று வீழ்த்துபவன் தமிழன்.

நாகரிகம் கண்டோம் புது காலணியில்
உடலினை மறைக்கும் உடையினில் கண்டோம்,
மூச்சினில் கண்டோம்; பேச்சினில் கண்டோம்
'மனிதகுலம்' என்ற மகத்துவத்தை மறந்தோம்
'யாம் தமிழன்' என்றதை நினைத்தோம் - அது
சுயநலம் என்பதை மறந்தோம்
உலகம் என்பது ஒன்று, அதில்
உறவு காண்போம் மனிதன் என்று.

● சுதா ஜெயந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மிகவும் மலிவானது!

# தொலைபேசிக் கட்டணத்தில்

# 40%வரை பணத்தைச் சேமியுங்கள்

தமிழ் அன்பர்களுக்கு மகிழ்ச்சியுடன் நாம் அறிமுகப்படுத்தும் ITMs டெலிபோன் அட்டைகள். (ITMs telekort)

Telenor ஐ விட 40% கழிவுகளை உங்களிற்கு வழங்குகின்றோம்.

வீட்டுத் தொலைபேசியா, தொழில் செய்யும் இடங்களிலுள்ள தொலைபேசியா, மொபைல் தொலைபேசியா கவலை வேண்டாம். சகல தொலைபேசிகளிலும் எமது ITMs அட்டைகளைப் பயன்படுத்தலாம்

உடன் தொடர்பு கொள்ளுங்கள்!

## 38 26 02 82

ஒஸலோ உள்ளடங்கலாக நாடு முழுவதும் எமது ITMs அட்டை விற்பனை முகவர்கள் செயல்படுகின்றார்கள்

உதாரணங்கள்:

| | வழமையாக நீங்கள் செலுத்தும் கட்டணம் | எமது கட்டணம் | சேமிப்பு |
|---|---|---|---|
| இலங்கை | 17, 52 | 13, 50 | 25% |
| இந்தியா | 21, 90 | 13, 50 | 40% |
| பாகிஸ்தான் | 17, 52 | 13, 50 | 25% |
| பங்களாதேஷ் | 21, 90 | 13, 50 | 40% |

இன்னும் பல நாடுகளிற்கும் விசேட கழிவுகளை வழங்குகின்றோம்

தாமதியாமல் தொடர்பு கொள்ளுங்கள்

Telefon/Fax 38 26 02 82

**ITM International Tele Communication Marketing,**
**Elveveien 3, 4500 MANDAL, NORWAY**

www.tamilarangam.net

# சமூக மாற்றங்கள் மத்தியில் நவீனத்துவமும், பின்நவீனத்துவமும்

பா.உதயன்



இன்றைய நவீன உலகில் நவீனத்துவத்திற்குப் பின் ஏற்பட்ட மாற்றம் என்ற ரீதியில் பின் நவீனத்துவம் (Post - modernism) என்ற புதிய சமூகக் கோட்பாடு இன்று பலரால் பேசப் படுகிறது. பல புத்திஜீவிகளில் இருந்து பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற தொடர்புச் சாதனங்களில் அடிக்கடி பின்நவீனத்துவம் பற்றிய விவாதங்கள், கருத்துகள் என்பவை பற்றி மிகவும் முக்கியமாகப் பேசப்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. பின்நவீனத்துவம் பற்றிய இந்தப் புதிய சமூகக் கோட்பாடு வளர்ச்சியுற்ற சமூகங்களில் மேலும் ஆதிக்கம் செலுத்துவதைப் பார்க்கிறோம்.

அரசியல் பொருளாதார ரீதியாக மாற்றமடைந்து வளர்ச்சியுற்ற நவீன முதலாளித்துவ சமூகங்கள் மேலும் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் தம்மை மாற்றங்களுக்கு உட்படுத்திக் கொண்டே போகின்றன. பழைய விதிகளையும், கோட்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு புதிய மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதன்பின் பழைய கோட்பாடுகளும், விதிகளும் மறைந்து விடுகின்றன. உலகில் இன்று உள்ள அனைத்து மாற்றங்களும் பொருளாதார அல்லது அரசியற் பின்னணி கொண்டவையே. அது மாத்திரமன்றிப் பொருளாதார உற்பத்தியிலும் சந்தைப் படுத்தலிலும் தம்மைத் தொடர்பு படுத்துகின்றன. புதிய மாற்றங்களும் புதிய கண்டுபிடிப்புகளும் உலகின் நாடுகளின் தொழில் நுட்ப விஞ்ஞான வளர்ச்சியின் அபிவிருத்தி சமூகம் அல்லது நவீன சமூகம் என்று அழைக்கப் படுகின்றன.

சமூக மாற்றங்களினூடாக நவீனத்துவம் அல்லது பின்நவீனத்துவம் என்று பேசப்படும் சமூகக் கோட்பாடுகள் அனைத்தும் ஒன்றில் இருந்து இன்னொன்றாகத் தோற்றம் பெற்ற ஓர் புதிய சமூக கலாச்சார மாற்றம் போன்றதே. ஓர் புதிய cultural paradigm ஆகப் பின்நவீனத்துவம் நவீனத்துவத்திலிருந்து தோற்றம் பெற்று ஓர் சமூகக் கோட்பாடாக (social theory) இன்று கலாச்சார மறுமலர்ச்சிக்கு வழிவகுத்ததோடு சமூக ஏற்றத் தாழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு மாற்றங்களினூடாக வளர்ந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நவீனத்திலிருந்து மேலும் பல சமூக பொருளாதார கலாச்சார மாற்றங்களுடன் கூடிய ஓர் புதிய கலாச்சார மாற்றமாக புதிய நவீனத்துவம் தன்னை அடையாளப் படுத்தி நிற்பதைக் காண்கிறோம். சமூக விஞ்ஞானப் பார்வையில் புதிய நவீனத்துவமானது ஓர் புதிய **scientific paradigm** ஆகத் தன்னை அறிமுகப் படுத்துகிறது.

நவீனத்துவ சமூகத்தின் அரசியல், பொருளாதார மாற்றங்களை நாம் புரிந்துகொள்வது மூலம் பின் நவீனத்துவத்தின் கலாச்சார வேறுபாடுகளை, அதன் தோற்றம் பற்றித் தெரிந்துகொள்ள முடிகிறது. அமெரிக்க சமூகவியற்துறைப் பேராசிரியர் ஒருவரது (**Proff. T. Kuhn**) ஆராய்ச்சி நூலான விஞ்ஞானப் புரட்சி இதனை மேலும் விளக்கமாக வலியுறுத்துகிறது. தொழில்நுட்ப விஞ்ஞானப் புரட்சிகள் எப்படிப் புதிய விதிகளை, புதிய மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன எனc **new paradigm** பற்றிய புதிய மாற்றங்களைப் பற்றிய அறிவார்த்தத் தன்மையை விளக்குகின்றார். வித்தியாசமான சமூகங்கள் எப்படிப் புதிய விஞ்ஞானப் பொருளாதார மாற்றங்களை உள்வாங்கி முன்னோக்கி நடக்கின்றன என்ற விஞ்ஞான மாற்றம் சம்பந்தமான கேள்வியாக இது நமக்குப் படுகின்றது.

18ம் அல்லது 19ம் நூற்றாண்டுகள்ல் வாழ்ந்த ஜேர்மன் நாட்டுத் தத்துவவியலாளர்களான **Weber, Tones** போன்ற நவீனத்துவவியலாளர்களால், நவீனத்துவம் பற்றியும் சமூக பரிணாம வளர்ச்சி பற்றியும் அன்றிப் பலதரப்பட்ட சமூகங்களின் அரசியல் பொருளாதார கலாச்சார வேறுபாடுகள் அதன் மாற்றங்கள் பற்றியும், இதன் அடிப்படையில் அமைந்த நவீன பொருளாதார தொழில்நுட்ப வளர்ச்சியுடன் கூடிய நவீன சமூகத்தின் இன்றைய இன்றைய சமூக மாற்றங்களைப் பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய ஓர் நவீன தத்துவக் கோட்பாட்டை நோக்கி வளர்ச்சி பெற **Weber** இன் புதிய சமூகவியற் கோட்பாடு வழிவகுத்தது. ஜேர்மன், பிரான்ஸ், பிரட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் பொருளாதார அரசியலுடன் கூடிய ஸ்தாபன ரீதியான வளர்ச்சிக்கும் மனித சமூகத்தின் புதிய விஞ்ஞானத்துடன் கூடிய நவீன பொருளாதார அரசியல் மாற்றங்களுக்கும் அல்லது வளர்ச்சிக்கும் இவர்களது சமூக அரசியல் எழுத்துகள் காரணமாயின. இந்த நவீன கோட்பாட்டின் மாற்றமே இன்று நாம் காணும் நவீன அரசு (**modern state**) நவீன சமூகம் (**modern society**) ஆகும்.

இரண்டாம் உலகமகா யுத்தத்தினை அடுத்து உலகில் பல புதிய சமுதாய, அரசியல் மாற்றங்களையும் உலகின் அனைத்து சமூகங்களும் உள்வாங்கிக் கொண்டன. முக்கியமாகப் பல ஐரோப்பிய நாடுகள் பொருளாதார ரீதியில் தன்நிறைவு எய்தின. ஜனநாயக அரசியலை ஒட்டிய புதிய அரசியற் கோட்பாடுகள் தோற்றம் பெற்றன. தனிமனித சர்வாதிகார ஆட்சியில் இருந்து விடுபட்டுப் பல நாடுகள் தனிமனித சுதந்திரத்துடன் கூடிய பலகட்சி ஆட்சிமுறையில் வளர்ச்சி கண்டன. பல இன, மத, கலாச்சாரங்களைக் கொண்ட சமூகங்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பல புதிய தேசங்கள், அரசுகள் தோன்றப் 19ம் நூற்றாண்டின் அடிப்படை அரசியல் மாற்றங்கள் காரணமாயின.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சி அல்லது நவீனத்துவம் மானிட வளர்ச்சிக்கு அல்லது ஸ்தாபன ரீதியான வளர்ச்சிக்கு வழிவகுத்தாலும், இந்த நவீனத்துவத்திலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அன்றாட மனித வாழ்வில் பல தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மனிதனை இயந்திர மயப்படுத்துகிறது எனப் பல புதிய சமூகவியலாளர்கள் வாதிடுகின்றனர். பின் நவீனத்துவவாதிகளும், புதிய பழமைபேண்வாதிகளும் (**neo conservatives**) புதிய மாக்சியவாதிகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நவீனத்துவத்தை ஏற்றுக்கொண்டும், ஏற்றுக் கொள்ளாமலும், பல வாதப் பிரதிவாதங்களை முன்வைக்கின்றனர். நவீனத்தின் குறைபாடு பற்றியும் இதன் தாக்கம் பற்றியும் பல எதிர்க் கருத்துகளை முன்வைக்கின்றனர். இவ்வாறு நவீனத்துவத்தில் இருந்து விடுபட்டு அல்லது நிரப்பப் படாத பகுதிகளைப் புதிய கலாச்சாரங்களுடன் கூடிய ஓர் புதிய வடிவமாகப் பின்நவீனத்துவத்தைப் பார்க்கிறார்கள்.

நவீனத்துவமானது கலாச்சார மாற்றங்களையும் அதன் வேறுபாடுகளையும் காண்பிக்கின்றது. பின்நவீனத்துவமானது நவீனத்திலிருந்து மேலும் பலபடி முன்னேறி மொழி பற்றிய அல்லது மானிடவியலின் இயங்கியல் தன்மையைப் புதிய பார்வையில் தர எத்தனிக்கிறது. பின்நவீனத்துவமானது தன்னைக் கலாச்சாரத்துடன் மொழியுடன் அல்லது வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுடன் தொடர்புபடுத்தி ஓர் புதிய கலாச்சாரத்தைத் தரம் வாய்ந்த புதிய யுக்தியுடன் பின்நவீனத்துவப் படைப்பாளிகளால் பார்க்கப் படுகிறது. பின்நவீனத்துவமானது நவீனத்துவக் கோட்பாடுகளுடன் ஒட்டியும் ஒட்டாமலும், மேலும் பல எல்லைகளைக் கடக்க முயல்கிறது. இதற்குத் துணையாக மானிடவியல், உளவியல், குறியீடு, மொழியியல் ஆகியவற்றின் ஆரம்பம், அடிப்படை, மாற்றம் என்பவற்றைக் கலாச்சாரக் கண்ணோட்டத்துடன் பார்வையாளர்முன் நிறுத்துகிறது. நவீனத்துவமானது சமூக மாற்றங்களை வலியுறுத்துகிறது. பின்நவீனத்துவம் புதிய கலாச்சாரங்களுடன் கூடிய ஓர் பின்நவீனத்துவ கலாச்சார அமைப்புக்குள் மனிதனை அழைத்துச் செல்கிறது. இயற்கையின் இருப்புகளை மாறுபட்ட கலை வடிவங்களில், சில கற்பனைவாதம் கலந்த முறையில் உற்பத்தி செய்கிறது. மானிடத்தின் வளர்ச்சி, விடுதலை போன்றவற்றின் விழுமியங்கள், பெறுமதிகளை வித்தியாசமான கலாச்சாரக் குறியீடு மூலம் வெளிப்படுத்துகிறது. எனவே பின்நவீனத்துவமானது கலாச்சார அல்லது இலக்கியப் பார்வைகளை அல்லது அதன் பெறுமதிகளைப் புதிய மாற்றங்களுடன் (New! Improved!!) வெளிப்படுத்துகிறது. இதனால் பின்நவீனத்துவத்தை நவீனத்தின் பின்வந்த புதிய நவீனத்துவமாகப் (Most modernism) பார்க்கின்றனர். பின்நவீனத்துவம் ப்றறிய பார்வை அல்லது மதிப்பீடு பற்றிப் பல புதிய இலக்கியவாதிகள் அல்லது எழுத்தாளர்கள் பலவிதமான வடிவங்களில் பார்க்கின்றனர். இன்றைய இளைய தலைமுறை எழுத்தாளர் மத்தியில் இது மிகவும் பிரபல்யமடைந்து வருகின்றதைக் காண்கின்றோம். பின்நவீனத்துவம் பற்றிய பார்வையில் எனக்குத் தெரிந்த சிலவற்றைப் பற்றித்தான் நான் இந்தக் கட்டுரையில் எழுத முயன்றேன். பின்நவீனத்துவம் பற்றிய அனைத்து வடிவங்களையும் அல்லது அதன் அமைப்பு பற்றிக் கடுமையாக விமர்சிப்பதற்கு நான் ஓர் பின்நவீனத்துவவாதி அல்ல; பின்நவீனத்துவம் பற்றி அறிய ஆவல் கொண்டவர்களில் நானும் ஒருவன்.

சகலவிதமான
சிறந்த அச்சு
வேலைகளுக்கும்

சுவடுகள் பதிப்பகம்
Herslebs gt 43.
0578 OSLO.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பார்த்தேன் பரதம் பருகினேன் பாமாலை

செல்வி.ப.மயூரி,
நார்விச்




*சிவாஞ்சலி நர்த்தனாலயாவின் இரண்டாவது ஆண்டு விழாவும் ஈழத்து இன்னிசை இளவரசு சங்கீதபூஷணம் திரு. பொன். சுபாஷ்சந்திரன் அவர்களின் என் மனசு பாடுது என்ற இசைத்தட்டு அறிமுக விழாவும் ஒஸ்லோ சம்புன்ஸ் மண்டபத்தில்* (**Oslo Samfunshuset**) *பார்த்து ரசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதில் திரு. கார்மேகம் நந்தா அவர்களின் அறிவிப்பு மிகவும் நன்றாக அமைந்தது. ஆரம்ப நிகழ்ச்சிகள் அனைத்தும் வழமைபோலவே நடைபெற்றது. அக்கணம் நான் எங்கேயிருக்கிறேன் என எண்ணத் தோன்றியது. ஏனெனில் எமது பண்பாட்டுக்கிணங்க மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சி ஆரம்பிக்கப் பட்டது. நாட்டியங்கள் பிரமாதம். சிறுவர் சிறுமியர் தாளத்தை அவர்களின் காலடிகளில் அடக்கினர். இவற்றைப் பார்க்கும்போது நாட்டியமயில் திருமதி மாலதி யோகேந்திரனின் திறமை புலனாகியது. அவர் எவ்வளவு கஷ்டப்பட்டு அவர்களை நெறிப்படுத்தியுள்ளார் என்பது என்னால் உணர முடிந்தது. என்னை மிகவும் கவர்ந்த*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில்லானாவைப் பற்றிக் கூறுகிறேன். திரு. பொன். சுபாஷ்சந்திரனின் வாயிலிருந்து வந்த தில்லானா என் உயிர்நாதத்தையே தொட்டது. அதை என் வாழ்நாளிலேயே மறக்க முடியாது என எண்ணுகிறேன். திருமதி எலிசபெத் அல்பிரட் அவர்களும் நன்றாகப் பாடினார்.

எனது தந்தையார் ஒரு பழைய கலைஞன். அவர் அடிக்கடி கூறுவார், நாட்டியத்தில் முத்திரைகளிற் சுத்தமும் அலங்காரமும் ஒருங்கே அமைவது கடினம் என. ஆனால் அவையிரண்டையும் ஒருங்கே பார்த்து ரசிப்பதற்கு உதவி புரிந்த நாட்டியமயில் திருமதி மாலதி யோகேந்திரனுக்கு எனது மனமார்ந்த நன்றிகள், வாழ்த்துகள். அவரின் நாட்டியப்பணி மென்மேலும் சிறக்க வேண்டுமென்றும், அவரின் ஆரோக்கியமான வாழ்வுக்காகவும் என்றென்றும் பிரார்த்திக்கிறேன்.

ஈழத்து இன்னிசை இளவரசு திரு. பொன். சுபாஷ்சந்திரனின் இசைமாலை பிரமாதம். என் மனது பாடுது என்ற இசைத் தட்டிலிருந்த பாடல்கள் அனைத்துமே பிரமாதம், அதில் சின்னக்குயில் சிங்காரமாய்க் கூவிப் பார்க்குது, ஜலசா ஜலசா ஆத்துவழி போய்வருவோம் ஜலசா கையில ஆனமட்டும் பலமிருக்கு ஜலசா சொத்துக்கொரு வழியிலையே ஜலசா ஆனால் சொர்க்கத்தில இருக்கிறமே ஜலசா ஆகிய இரு பாடல்கள் என் மனதைக் கவர்ந்தன. அதில் சொத்துக்கொரு வழியிலையே ஜலசா ஆனால் சொர்க்கத்தில இருக்கிறமே ஜலசா என்ற வரியைக் கேட்கும்போது எங்கள் நிலையை அவதானித்துத்தான் கவியரசு வைரமுத்து எழுதியிருக்கிறார் என ஐயுறத் தோன்றுகிறது. ஏனென்றால் பூகோளப்படி நோர்வே வடதுருவத்திற்குக் கிட்டவுள்ளது. எமது முதாதையர்கள் வடமுனையைத்தான் சொர்க்கம் என்பார்கள். திரு. பொன் சுபாஷ்சந்திரனின் இசைப்பணி மென்மேலும் தொடரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இசைத்தட்டு அறிமுக விழாவில் திரு அன்ரன் டேவிட், திரு கோவிலூர் செல்வராஜன் மேலும் பல கலைஞர்களையும் மிக நுண்ணியமாக அனைத்து மக்களுக்கும் விளங்கும் வகையில் அறிமுகப் படுத்தினார் அறிவிப்பாளர் கார்மேகம் நந்தா அவர்கள். இவர்கள் அனைவரும் தாய்நாட்டிற் கலைப்பணி ஆற்றியவர்கள். அவ்வண்ணமே இங்கும் கலைப்பணி ஆற்றவேண்டும். இல்லையேல் என்போன்ற இளம் சமுதாயம் தாய்நாட்டிலிருந்து அகதியானது போலவே தாய்நாட்டுக் கலை கலாசாரத்தில் இருந்தும் அகதியாகி விடுவார்கள் என்பது திண்ணம். ஆகவே திரு. பொன் சுபாஷ்சந்திரன், திருமதி மாலதி யோகேந்திரன், திரு அன்ரன் டேவிட், திரு கோவிலூர் செல்வராசா மற்றும் கலைஞர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து தங்கள் கலைப்பணியைச் செவ்வனே செய்து என் போன்ற இளைய சமுதாயத்தினரை ஊக்குவிக்க வேண்டி நிற்கிறேன்.

**ஈழத்துக் குயில் ஒன்று தேசம்**
**விட்டுவந்தும்**
**பாசம் மிகு தமிழில் பண்பாடுது!!**

தேசம் விட்டு வந்த நான், பாசம் மிக்க என் அன்னை மொழி என்னை மோசம் செய்யுமோ என்று, என் மனம் கோசமிடும் வேளைதனில் வாணிதாசனாம் திரு. பொன் சுபாஷ்சந்திரன் அவர்களின் இன்னிசை தாங்கிய, இனிய சி.டி. (CD) என் கரம் கிட்டியது. ஆசையுடன் சுழலவிட்டேன், கேட்டேன். ஒரு தடவையல்ல, பல தடவைகள். வறண்டு கிடந்த என் இதயம் திரு. பொன் சுபாஷசந்திரன் அவர்களின் மென்மையான, அமைதியான குரல் மூலம் வெளிவந்தால்தான் அது மெல்லிசை என்ற பெயரைத் தாங்கி வந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. பாடல்களில் வரும் ஒவ்வொரு வரிகளும் தாங்கிவரும்

www.tamilarangam.net

பொருள்களும், அவரின் தொனியில் ஏற்படும் பாவங்களால், உணர்ச்சிகள் சுண்டி இழுக்கப் படுகின்றன. உதாரணமாகக் கண்கள் குளமாகுதே நெஞ்சம் தடுமாறுதே தாய்நாட்டின் நிகழ்வுகள் நாள்தோறும் அறிகையிலே என்று பாடும்போது இதயங்களில் குருதியை உறையச் செய்கிறது. திரு சுபாஷ்சந்திரனை நான் பார்த்ததில்லை. ஆனால் அவரின் குரல்வள அசைவுகளில் இருந்து அவரை என்னுள் உருவகப் படுத்துகிறேன். வாணியின் மழலை அல்லவா, வளமாகத்தான் இருப்பார். என்போன்ற கலைஞர் - ரசிகர்களின் ஆசிகள் அவரை வளம்பெறச் செய்யட்டும். தேசம் கடந்து வந்தும், பாசம்மிகு தமிழிசையை, வாசம்மிகு மலராக்கும் திரு பொன். சுபாஷ்சந்திரன் அவர்களின் இசைப்பணி வானளாவி வளரட்டும்.

**நார்விக் பரம்சோதி.**

# அரசமரம்

**ஒட்டமாவடி அறபாத்**

என் கிராமத்து எல்லையில்
ஓர் அரசமரம்
தான்தோன்றியாய் வளர்ந்திற்று
சனங்களின் உணர்வினில்
அது உறுத்தலின்றியே பருத்திற்று.

இடையர்களும் மிருகங்களும்
இளைப்பாறுமிடமாய்
கிளை பரப்பிற்று.

பின்னொரு நாள்
எனதூரின் எல்லை சுறுசுறுப்பானது.
அரச மரத்தின் அடிவேரில்
புத்தனிருந்தான்.
அதனைச் சூழவும் காவிநிறத்தில்
பந்தலிட்டனர்.
மகாநாயக்கர்கள் "பிரித்" ஓதினர்
அலங்கார பல்புகள்
கந்துகளில் தொங்கி
கலர்கலராய் உமிழ்ந்தன.

எல்லைப்புறத்துக் குடிசைகள்
நகர்த்தப்பட்டன
அரசமரச் சூழல் புனிதமாவதற்கு

எச்சில் ஒழுகும் வெற்றிலை வாயுடன்
என் கிராமத்துச் சனங்களும்
வேடிக்கை பார்த்தனர்.

அதற்குப் பின்வந்த இரவொன்றில்
தூக்கம் கலைந்து
காதுகள் தீட்டினேன்
"புத்தம் சரணம் கச்சாமி"
என் எல்லையோர
அரசடி விகாரையில்
ஒலிபரப்பி அலறியது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராமன்

# அடிமைத் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பது பாட்டாளி வர்க்கங்களின் ஐக்கியத்துக்குத் தடையா?



இலங்கையில் 60 வருடங்களாகப் பாட்டாளி வர்க்கங்களின் ஐக்கியம் பற்றிப் பேசப்பட்டு வந்த போதிலும், இவற்றால் நடைமுறையில் ஐந்து சதவீத அளவிலான ஐக்கியத்தையேனும் சாதித்துவிட முடிந்ததில்லை. ஆகக் குறைந்தளவிலான முதலாளித்துவ ஜனநாயகக் கோரிக்கைகளைக் கூட இலங்கைத் தொழிலாளர் விவசாயிகள் நலன் சார்ந்து வென்றெடுத்திட இவர்களால் என்றுமே முடிந்ததுமில்லை. அண்மைக் காலங்களில் நடந்து முடிந்த விடுதலைப் புலிகள் - அரசு தீர்வுத் திட்டப் பேச்சுகளின் போதும் - தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய இறைமைக்குப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் சந்திரிகா அரசால் எந்தவொரு தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்க முடியாமல் காலத்தை இழுத்தடிப்புச் செய்தபோதும், யுத்தத் தவிர்ப்புக்குப் பிரபாகரனால் காலக்கெடு வழங்கப்பட்ட போது - அதில் எவ்வித அக்கறையும் இல்லாமல் இருந்துவிட்ட சந்திரிகாவின் நரித்தன அரசியலின் மீதும், அதன் இனவாதப் போலி முகங்களை அம்பலப்படுத்துகிற ஒரு வெகுஜனப் போராட்டத்தைக்கூட இவ் ஐக்கியம் பேசுவோரால் சாதித்துக் காட்டிடவும் முடிந்ததில்லை.

‘சூரியமல்’ விடுதலை அமைப்பைத் தொடர்ந்து இலங்கையில் உருவாகிவந்த எந்தவோர் இடதுசாரி அமைப்பும் தேசிய இனங்களின் உரிமை மீதான பிரக்ஞையின்றி உருவாகி வந்தவை அல்ல. இற்றைக்கு 60 வருடங்களுக்கு முன் (1935) தொடங்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சியாகிலும் சரி, அதன் 5

www.tamilarangam.net

வருடங்களின் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியாகிலும் சரி, தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து என்ற கோரிக்கைகளை முன்வைத்திருந்தன. 1943ல் தனது மகாநாட்டில் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து உடைந்து உடைந்து உருவாகிவந்த அனைத்து இடதுசாரிக் கட்சிகளும் சுயநிர்ணய உரிமையை வாய்நிறைய அங்கீகரித்த போதிலும் இவற்றில் பெரும்பாலான கட்சிகள் தேசிய இனங்களின் ஜனநாயக உரிமை மீதான நடைமுறை மறுப்பின் பேரிலேயே தமது அரசியற் தத்துவச் சவாரிகளை நிகழ்த்தியதும் அவற்றின் போக்கிலேயே ஐக்கியப் புரட்சியைக் கோர முற்பட்டதும் கசப்பான உண்மைகளாகும்.

1971க்குப் பின்னர் சண்முகதாசனின் சீனச் சார்புக் கட்சியில் இருந்து பிரிந்த கட்சிகளான கம்யூனிஸ்ட்டுக் கட்சி (மா.லெ), இடது கம்யூனிஸ்ட் கட்சி என்பனவும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை வெளிப்படையாகவே எதிர்த்து வந்தன. இன்று 'சுமைகள்'. என்ன காரணங்களை முன்வைத்துத் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை எதிர்க்கின்றதோ அதே காரணங்களைத்தான் அவை அன்று முன்வைத்துச் சீரழிந்தன. அசலாக அன்றே எழுதப்பட்ட சந்தர்ப்பவாத, சீரழிவுவாதங்களின் மிச்ச சொச்சங்களையே இன்று சுமைகளில் - இதழ் 12ல் - சி.மோகனதாஸ் எழுப்பியுள்ளார். புதிய ரத்தம், புதிய பரம்பரை என்ற அழகிய வார்த்தைகளால் இவற்றை அலங்கரித்து இதன்மீது சுமைகள் தனது தத்துவ நிலைப்பாட்டைப் பிரகடனம் செய்தது மட்டுமன்றி, தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகளின் மறுப்பின் மீதேறிப் பழைய பயணங்களைத் தொடர்ந்தும் செய்யப் புதிய உல்லாச அழைப்பை விடுத்துள்ளது.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றி (வாயளவிலாவது) கூறும் நவசமசமாஜக் கட்சி, மற்றும் புரட்சிகரக் கம்யூனிஸட் கழகம் ஆகியவற்றிடம் இருக்கும் நேர்மையான தன்மைகூட ஐக்கியப் புரட்சியை உச்சரிக்கும் (கொச்சைப் படுத்தும்) சுமைகளிடம் இல்லாமல் இருப்பது வருத்தத்திற்குரியதே தேசிய விடுதலையை வெறும் ஏகாதிபத்திய எதிர்ப்பாக மட்டுமே காட்டிவரும் சுமைகளின் குருட்டுத்தனம் அம்பேத்காரை விமர்சனமின்றி இந்திய தேசியப் போராட்ட வீரராகக் காட்ட வைத்தது. இவ்வாறான பலவீனமான நிலைப்பாடுகள் இலங்கையில் தேசிய சக்திகளை அடையாளம் காண வைப்பதில் தவறிழைக்க வைப்பதோடு, தேசிய விடுதலையை ஏகாதிபத்திய எதிர்ப்பாக மாத்திரமன்றி எப்பொழுது நிலப்பிரபுத்துவத்தின் மீதான இறுதி வெற்றியாகக் காண மறுத்து அடம்பிடித்து வருகிறார்களோ அதுவரைக்கும் இவர்களால் புரட்சியில் ஒரு அடியேனும் முன்னுக்கு எடுத்து வைக்க முடியாது. எந்தவொரு தேசிய இனத்தினதும் உரிமையை (சுயநிர்ணய உரிமையை) மறுத்து எழுப்பப்படும் கருத்தியலானது ஐக்கியத்தையும், உயர்ந்த தத்துவத்தையும் அவை உச்சரிப்பவையாக இருந்த போதிலும் இது சந்தேகத்திற்கு இடமின்றி ஏகாதிபத்திய பொருளாதார நலன் பேணுகின்ற - காலனித்துவ வாதங்களைக் கொண்ட ஒடுக்குமுறைக் கருத்தியலே ஆகும். இவைகளை தேசிய சக்திகள் மட்டுமென்ன, பாட்டாளி வர்க்கங்களே ஒருபோதும் மன்னிக்காது.

## 2.

தேசிய இனங்களின் சுயநிர்ணய மறுப்பின் பேரில் எழுப்பப்படும் சுமைகளின் ஐக்கியப் புரட்சிக் கருத்தியலானது பின்வரும் சாரங்களோடு தொடங்கப்பட்டிருந்தது. இலங்கையை ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் கைப்பற்றியதாகவும், பிரிட்டிசாரின் பிரித்தாளும் தந்திரத்தால் பாட்டாளி வர்க்கங்களின் ஐக்கியம் கூறுபோடப் பட்டதாகவும், தமிழ்த் தேசிய விடுதலையைப் பாட்டாளி வர்க்கம் ஆதரித்துத் தமிழ்த் தலைமை கொடுப்பது பிரவினையை ஆதரிப்பதாகவும், இலங்கையில் பாட்டாளி வாக்கங்கள் ஐக்கியத்தோடு இருந்ததாகவும் தொடர்ந்தும் இருப்பதாகவும் தத்துவ நிலைப்பாடு கொண்டு எழுதியிருந்தது.

'சிலோன்' சிறிலங்கா அல்லது இலங்கை

www.tamilarangam.net

என்றழைக்கப்படும் இன்றைய இலங்கைத் தீவானது ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட மைய அரசியல் அமைப்பைக் கொண்ட - நாட்டின எல்லைக் கோட்டை வரைந்த ஒரு நாடாக ஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் வருகைக்கு முன் என்றுமே இருந்ததில்லை. பல சுதந்திர இராச்சியங்களைக் கொண்டு ஆளப்பட்ட இந்து சமுத்திரத்தில் ஒரு சிறிய திடலில் சிங்களவர்களும், தமிழர்களும் மாறிமாறி எல்லா இராச்சியங்களையும் கைப்பற்றி ஆள முடிந்த போதிலும், அதன் கிராமிய நிர்வாக முறை உடைக்கப்பட்ட ஓர் அரசியல் அமைப்பின் கீழ் அவை என்றுமே ஆளப்பட்டதுமில்லை. இவ்வாறு கைப்பற்றல் ஆட்சியானது நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கவும் இல்லை. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கூட மூன்று பிரதான இராச்சியங்களான கண்டி, கோட்டை, யாழ்ப்பாணமும் சில சிற்றரசுகளுமே அங்கிருந்தன. கரையோர இராச்சியங்களைக் கைப்பற்றிய போர்த்துக்கேயரால் கூடத் தனித்தனி நிர்வாகங்களை இணைத்து நிர்வகிக்க முடியவில்லை. பின்னர் வந்த ஒல்லாந்தராலும் அவ்வாறு நிர்வகிக்க முடியவில்லை. ரோமன் டச்சுச் சட்டத்தைக் கொண்டுவந்து நிர்வகிக்க முற்பட்ட போதிலும், பிரதேச வழக்கங்களைக் கருத்தில் கொள்ளாமல் அவர்களால் ஆளமுடியவில்லை.

பிரித்தானியர் கண்டியைக் கைப்பற்றியதும் (1815) இந்து சமுத்திரத் தீவில் (இன்றைய இலங்கை) இருந்த தனித்தனி இராச்சியங்களும் சில சிற்றரசுகளும் உட்பட அனைத்துமே அவர்களின் கைவசம் வந்து சேர்ந்தது. முன்னேற்றம் அடைந்த ஏகாதிபத்திய நாடாக பிரிட்டன் இருந்ததால் தனித்தனி அரசுகளும், சிற்றரசுகளும் உள்ளிட்ட மக்கள் குழுமங்களை வலுக்கட்டாயமாக ஒன்றுசேரக் கட்டிப் போடவும், தனது காலனித்துவ நலன்களோடு சிலோன் என்ற நாட்டின் எல்லைக் கோட்டை வரையவும் அதனால் முடிந்தது. போத்துக் கேயராலும் ஒல்லாந்தராலும் நிர்வகிக்க முடியாத ஒன்றிணைப்பை பெருந்தோட்டப் பொருளாதார அமைப்பைக் கொண்டு பிரிட்டன் நிர்வகிக்க முற்பட்ட போதும் அதற்கு ஓர் மையப்படுத்தப்பட்ட அரசில்



அமைப்புத்தேவைப்படவே அது (1833) கோல்புறூக் சீர்திருத்தச் சட்டத்தை ஏற்படுத்தியது. தனது காலனித்துவ நாட்டின் எல்லைக் கோட்டைப் பலப்படுத்தவும் அதற்காக இனங்களை வலுக்கட்டாயமாக ஓர் கட்டுக்குள் வைத்தாளவும், கிராமியக் கேந்திர எல்லைகளைத் தாண்டாத மக்களைப்பிரித்தும் ஓர் கட்டுக்குள் இணைத்தும் ஆள முற்படுவதற்காகவே பிரித்தாளும் தந்திரத்தைக் கொண்டு வந்தனரே ஒழிய, சுமைகள் அர்த்தப் படுத்துவதைப் போலப் பாட்டாளி வர்க்கங்களின் ஐக்கியத்தை அன்று அவை கூறுபோடவில்லை. அப்பொழுது இலங்கையில் பாட்டாளி வர்க்கத்தின் ஜனநாயக வழிப்பட்ட இணக்கத்தின் ஊடாக நாட்டின் எல்லைக் கோட்டைத் தாமாகவே வரைந்து வைத்திருந்த ஒரு பாட்டாளி வர்க்க ஐக்கியம் அங்கே இருந்ததில்லை - அவை கூறுபோடப்பட. அக்காலத்து ஏகாதிபத்தியங்கள் தமது காலனித்துவ ஆதிக்கத்திற்குப் பிரித்தாளும் தந்திரத்தை மட்டும் பாவிக்கவில்லை, இணைத்தாளும் சதியையும் (எரித்திரியா - எதியோப்பியா) கையாண்டன.

www.tamilarangam.net

கிராமிய கேந்திர எல்லைகளைக் கடந்திராத இலங்கையின் மக்கள் குழுமங்கள் பிரிட்டிசாரின் பெருந்தோட்டப் பொருளாதாரக் கொள்கையினூடாக உந்தப்பட்டுக் கிராமிய எல்லைகளைக் கடந்து பரந்துபட்ட மக்களுடன் இணைகின்ற ஒரு பொருளாதார வாழ்வை எட்டியது. கிராமிய எல்லைகளைக் கடந்து வரும் மக்கள் புதிய பொருளாதார உற்பத்தி உறவுகளினால் உந்துதல் பெற்றுப் பிரக்ஞைபூர்வமாக தேசிய உணர்வுகளில் வளர்வதும், சுயமான தேசிய இயக்கங்களைக் கட்டுவதும்கூட ஏகாதிபத்தியங்களின் பலமான எல்லை வரைவிற்கு ஆபத்தானதே. இதனால் அதனதன் தேசிய உணர்வுகளைக் கட்டிப் போடவும் அதை அழித்தொழிக்கவும் தனது காலனித்துவ நாட்டின் எல்லை வரைவுக்கு உட்பட்ட தேசிய இனங்களுக்கு இடையே பகையை வளர்க்க, அவற்றின் சுயபொருளாதாரத்தின் தங்குதடையற்ற வளர்ச்சியை மட்டுப்படுத்த முட்டுக்கட்டை இடுவதற்கு ஓர் தேசிய இனத்திற்குத் தனிச் சலுகை வழங்கியது. பிரித்து ஆண்டது. பரஸ்பரம் தேசிய உணர்வுக்கு மதிப்பளிப்பதும், அதன் தேசிய உரிமையை அங்கீகரிப்பதும் நடைமுறையில் தேசிய சமத்துவத்தைக் கடைப்பிடிக்கின்ற திசைமார்க்கமே தேசிய எல்லைகளைக் கடக்க வைப்பதும், சர்வதேசிய உணர்வில் இணைய வைப்பதற்கும் உலகப் புரட்சிக்கான நாட்டின் எல்லைக் கோட்டையே கடக்க வைப்பதற்குமான வழிமுறைகள் என்பதை ஏகாதிபத்தியங்களே நன்கறிந்துள்ளன. காலனித்துவங்களில் தேசிய இனங்கள் தேசிய உணர்வில் வளர்ந்து இணைந்து ஐக்கியம் பெறாமல், தேசிய சமத்துவம் இல்லாத வேளைகளில், பாட்டாளி வர்க்கங்கள் ஐக்கியம் பெற்றிருப்பதாகக் கூறுவது அர்த்தமற்ற ஒன்றாகும். கிராமிய எல்லைகளைக் கடந்திராத ஒரு பலவந்தமான இணைவில், தேசிய சமத்துவத்தை அதன் சர்வதேசிய உணர்வைப் பாட்டாளி வர்க்கங்கள் அதன் யுத்தப் பள்ளியில் கற்றுத் தேறாத நிலையில் இலங்கையில் பாட்டாளி வர்க்கங்களின் ஐக்கியம் குலைந்து போகிறது என்ற தர்க்கமானது தத்துவ நிலைப்பாட்டிற்கே புறம்பானது.


பிரிட்டிசாரின் நாட்டின எல்லை வரைவுக்கு முன்னரும், இலங்கையின் போலிச் சுதந்திரத்திற்கு இடைப்பட்ட காலத்திலும், பின்னரும் கூடத் தேசிய இனங்களுக்கு இடையிலோ, பாட்டாளி வர்க்கங்களுக்கு இடையிலோ ஒரு ஜனநாயக வழிப்பட்ட ஐக்கியம் இருந்திருக்கவும் இல்லை, தோன்றவும் இல்லை. இலங்கையின் எல்லை வரைவுக்கும் சுதந்திரத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் நிலப்பிரபுத்துவ பிரதிநிதிகளாலும், உயர் நிர்வாக அதிகாரிகளாலும், பிரித்தானியர்களின் சேவகர்களாலும் சீர்திருத்தம் கோரித் தொடங்கப்பட்ட தேசிய காங்கிரஸ் கூட ஐக்கியமாக இராத நிலைமைகளையும் அக்காலகட்டத்தில் சிங்கள - முஸ்லிம் இனக் கலவரம் (1915) தோன்றியதையும் நாம் காணலாம். பாட்டாளி வர்க்கங்கள் தமது சொந்த முரண்பாடுகளை வெற்றி கொள்ளும் திசைமார்க்கத்திற்கு உகந்ததாக எல்லைக் கோட்டை வரைவது அல்லது மறுவரைவு செய்வது என்ற யுத்தப் பள்ளியில்தான் சர்வதேசியம் ஊட்டம் பெற்று ஐக்கியம் நிகழ்கிறது. ஐக்கியத்தைக் கற்றுத் தேறுகிறது.

இவ்வாறான பாட்டாளி வாக்க ஐக்கியம் இல்லாதபோது ஐக்கியப் புரட்சியா? தமிழீழமா? என்ற கேள்வி, அடிப்படையில் தவறானது. யுத்தப் பள்ளியில் ஊட்டம் பெறாத இவர்களின் பாட்டாளி வர்க்க ஐக்கியம் அதாவது பிறவியிலேயே பாட்டாளி வர்க்கம் சர்வதேசிய உணர்வில் பிறக்கிறது அல்லது ஏகாதிபத்திய நாட்டின் எல்லைக்கோட்டு வரைவு பாட்டாளி வாக்கத்தின் ஐக்கியத்தைச் சாதித்துவிட்டது என்ற நிலைப்பாடு மறுதலையாக ஏகாதிபத்திய பொருளாதார நலன்களுக்கு எவ்வாறு சேவகம் செய்கிறது என்பதையும், இந்தச் சீரழிவுவாதங்கள் எங்கிருந்து ஊற்றெடுக்கின்றன என்பதையும் தத்துவங்களோடு இனி ஆராய்வோம். பாட்டாளி வர்க்கச் சர்வதேசியத்தில் (பாட்டாளி வர்க்கத் தேசிய கொள்கையில்) மாக்சிசத் திரிபுகளை வேறுப்போம்.

(வரும்)

www.tamilarangam.net

# நாற் சந்தி



ஆசிரியர்,
சுவடுகள்.

தாங்கள் அனுப்பிய சுவடு 'நிறவாதமும் நிலைபெறலும்' கிடைத்துப் பயன்பெற்றேன். நன்றி. ஆக்கங்கள் அனைத்தும் சிறந்திவை. மேலும் இலங்கைப் பிரச்சனை பற்றித் தெளிவாக எழுதி உள்ளீர்கள். இலங்கையில் இருந்து சோலைக்கிளியின் கவிதைகள் வித்தியாசமாய் உள்ளன. கவிதைகள் குறைவு, அதிகரியுங்கள். வெளிநாடுகளில் வெளியாகும் மலர்களில் சுவடு மட்டுமே இலங்கையரின் கவிதைகளை ஏந்தி வருகிறது. இன்னும் அதிகரிக்கட்டும். மேலைநாடுகளில் இருந்து இலக்கியத்துக்காய்ப் பணிபுரியும், வேர்வை சிந்தும் மலர் சுவடுகள் மட்டுமே. மேலும் தொடர்ந்து மலர் அனுப்புங்கள்.

இலங்கையின் சிறுபுள்ளியில் இருந்து,
றபாய்டீன்.

சுவடுகள்,
அன்புடையீர்.

சுவடுகள் இரண்டு இதழ்களும் பெற்றேன். (நிறவாதமும் நிலைபெறலும் சிறப்பிதழ் உட்பட) நிறைய விடயங்களை உள்வாங்கிக்கொண்ட சுவடுகளைப் படித்தபோது, சில வேதனை மிக்க நிகழ்வுகளையும் உணர முடிந்தது. ஐரோப்பிய நாடுகளில் சொகுசு வாழ்க்கை நடாத்துகிறார்கள் என்று, இங்கே மனம் வெதும்புகிறார்கள். அங்கே தமிழன் தன் சுயத்தை விற்று, தன் இருப்பை இருத்திக் கொள்ள செத்துக் கொண்டே போராடுகிறான்.
யமுனா ராஜேந்திரனின் குறிப்புகள் மிகப் பயனுள்ளவை

www.tamilarangam.net

சுவடுகள் 66ல் ',சமர்' பத்திரிகைக் குழுவினர், முகமட் அபாரின் கருத்தொன்றினை மறுக்கும் விதத்தில், தங்கள் எண்ணத்தைச் சொல்லியிருந்ததைப் படித்து வேதனையுற்றேன். நான் ஒரு முஸ்லிம் என்ற உணர்வில், எம் வேதம் குர்ஆன் என்ற கோட்பாட்டில் நின்று என் எண்ணத்தையும் எழுதுகிறேன். குர்ஆனின் கருத்தோட்டங்களைத் தவறாகப் புரிந்து வைத்திருப்பவர்கள், அல்லது, புரிய வைக்கப் பட்டவர்கள் முஸ்லிம்களிலும் உள்ளனர்; முஸ்லிம் அல்லாதவரிலும் உள்ளனர். விளங்காதவர்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரலாம். தவறான புரிதலுடன் விளங்கி இருப்போரை, ஒளிக் கீற்றின்பால் இழுப்பது சற்றுச் சிரமமே. சமர் குறிப்பிட்டது போல் நிலையான விளக்கம் இல்லாமல் இல்லை. அது இறக்கப்பட்டது முதல் இன்றுவரை புள்ளியேனும் மாறாமல் உள்ளது. இனியும் அவ்வாறே இருக்கும். குர்ஆனை எந்தக் கோணத்திலும் அணுகலாம். சமூகம், சட்டம், கலாச்சாரம், இலக்கியம், இலக்கணம், புவியியல், அழகியல், விஞ்ஞானம், வானம், பூமி மற்றும் ஏனைய கோள்கள், அவரவர் துறைசார்ந்த ஆய்வுக் கண்ணோட்டத்துடன் குர்ஆனை அணுகி, நுணுகி ஆராய்ந்து அததுறை சார்ந்த அறிஞர்கள் குர்ஆனுக்கு விளக்கம் அளித்துள்ளார்கள். நவீன சிந்தனைகளுக்கேற்ப குர்ஆனின் கருத்துகள் இயைந்து கொடுப்பதையும் தெளிவுபடுத்தி உள்ளனர். எனவே நிலையான விளக்கம் என்று சமர் எந்தக் கோணத்தில் விளங்கி வைத்திருக்கிறது என்பது பற்றி நானறியேன்.

குர்ஆனின்கீழ் மதப் பிரிவுகள் உள்ளதாகவும் சமர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது. இஸ்லாம் ஒரு மதமல்ல, அது ஒரு மார்க்கம் என்பதை முதலில் தெளிவாக உணர்ந்து கொள்ளட்டும். அதில் முஸ்லிம் என்ற பிரிவினரைத் தவிர வேறில்லை. கருத்து அவறுபாடுகளால் பிளவுபட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கின்றோம். ஆனால் அந்தப் பிரிவுகள் குர்ஆனின் – ஹதீஸின் (நபியின் வாழ்க்கை வழிமுறை) அடிப்படை விடயங்களில் எவருமே பிளவுபடவுமில்லை. மோதிக் கொள்ளவுமில்லை. இதில் சிலர் தம் சுய லாபங்களுக்காகவும், மேற்கத்தைய இஸ்லாமிய வைரிகளால் வளர்க்கப்பட்ட சில இயக்கங்களாகவும்வளர்ந்து அப்பாவிப் பொதுமக்களைக் கவர்ந்து இஸ்லாமிய வேஷம் போட்டு இஸ்லாத்தை அழிக்கச் செயற்பட்டு வருகின்றனர்.

குர்ஆன் நாட்டுக்கு நாடு வேறுபட்டது அல்ல. வேறுபட்ட கருத்தினைக் கொடுக்கவும் இல்லை. பழைய குர்ஆன் ஒன்று உள்ளதாகவும் அதன் பிரகாரம் ஆபிரிக்க முஸ்லிம்கள் வாதிட முனைகின்றனர் என்றும் சமர் நகைப்பிற்கிடமாய் எழுதியுள்ளது. அவ்வாறாயின் புதிய குர்ஆன் ஒன்றைச் சமர் கண்டுபிடித்துள்ளதா? அன்றும் இன்றும் குர்ஆன் ஒன்றே ஒன்றுதான் என்பதையும், குர்ஆனின் வரலாற்றையும் படிக்கட்டும்.

பூமி உருண்டை என்பதும், பூமிதான் சூரியனைச் சுற்றி வருகின்றது என்பதும் குர்ஆனின் அழுத்தமான கருத்தாகும். டொக்டர் மொரிஸ் புகைல் எழுதிய குர்ஆனின் ஒளியில் விஞ்ஞானம், வலம்புரிஜானின் இஸ்லாம் போன்ற நூற்களைச் சமர் படித்துத் தெளிவுறட்டும். இது நீண்டு போகும் என்ற அச்சத்தில் இவ்வளவு போதும் சமருக்கு! தன் எண்ணத்தை மாற்றிக்கொள்ள.

அன்புடன்,
ஒட்டமாவடி அறபாத்

---

ஆசிரியர்,
சுவடுகள்.

அன்புடன் தாங்கள் அனுப்பிய சுவடுகள் கண்டேன். மகிழ்ச்சி! ஆக்கங்கள் மிகவும் நன்று. மேலும் ஈழத்துக் கவிஞன் சோலைக்கிளியின் கவிதையை உடன் காப்பி அடித்து வேறு பெயருடன் சுவடுகளில் கண்டேன். அப்படியான கவிதைகளுக்கு இடம் கொடாமல் இருப்பது நல்லது. இப்படி நடவாது கவனிக்கவும். மேலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு யுத்தம் குறையவில்லை. மின்னல் என்றெல்லாம் குண்டுகள் வெடிக்கின்றன. இங்கு பத்திரிகைக்கு விலங்கு போட்டுவிட்டார்கள். பத்திரிகையில் யுத்தம் நடக்கிறதுதானா என்றுகூடத் தெரியவில்லை. உங்களுக்கு எட்டியதை நீங்கள் பிரசுரியுங்கள்.

அல்.றபாய்டீன்,
காத்தான்குடி

---

ஓராயிரம் நெருடல்கள் பூக்கும் சுவடுகள் ஆசிரியருக்கு!.

என்றும் சுவடுகள் வளர்ச்சியில் கண்ணாக உள்ளேன். எனது நண்பர், உறவினர்களின் பார்வைகளையும் சுவடுகள் தொட்டிருக்கின்றன.
எற் இருப்புகள் எல்லாம் தங்களின் மன விருப்புகளின் பிரகாரமே செல்லும். சுவடுகள் பெரியது. அளவிடும் கருவி இன்னும் பிறக்கவில்லை.
வாதங்களுக்குக் கட்டுப்போடும் யுக்தி ஒரு வரலாறு படைக்கும்....
வித்தியாச அணுகுதல்கள் சுவடுகளெங்கும் காணப்படுகின்றன.
இது ஒரு முடிவின் தொடரல்ல,
ஒரு தொடரின் முடிவு.
தொடர்வேன்.

றிஸ்வியூ முஹம்மத் நபீல்,
கல்முனை.

---

ஆசிரியர்,
சுவடுகள்.

புலம்பெயர்ந்த இலக்கியவாதிகளின் ஊடுருவல் இலக்கிய பூமியில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை சுவடுகள் பத்திரிகை நிரூபித்துக் காட்டியுள்ளது.
பத்திரிகை என்பது சமூகத்தில் கறை படிந்திருக்கும் நிகழ்வுகளைப் புடம்போட்டுக் காட்டும் ஒரு ஊடகமாகும். அதனை சுவடுகள் சிறப்பாகவே செய்கின்றது. இதுபோன்ற பல பத்திரிகைகள் தொடர்ந்து வெளிவர முடியாமல் கருகிப் போனது கவலைக்குரிய ஓர் விடயமாகும். சுவடுகள் யுகம் யுகமாய் கால்பதிக்க வேண்டும் என்பதே என் அவா.

ஏயெம்மே.நிஸாம்,
சம்மாந்துறை

---

தேவலோகத்திற்கும் அப்பாலிருந்து யமுனா ராஜேந்திரன் எழுதிய ஈழத்து இலக்கியம், புகலிட இலக்கியம் இரண்டும் அரசியலுக்காகக் கஷாயம் குடிக்க வேண்டும் என்ற கட்டுரை ' நான் ஒரு இந்தியன் ' என்பதற்கப்பால் வேறெதையும் சொல்லவில்லை.
ஈழத்து இலக்கியம், புகலிட இலக்கியம் இரண்டிலும் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும் என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜ.ரா.வை யாராவது கேட்டார்களோ தெரியவில்லை. தன்னுடன் சம்பந்தமில்லாத விடயம் பற்றி ஜ.ரா. எழுதி ஏன் அவஸ்தைப்பட வேண்டும்.

பம்பாய் பற்றி எழுதினால் உன்னதம். யாழ்ப்பாண முஸ்லிம்கள் வெளியேற்றம் காத்தான்குடி படுகொலை பற்றியதானால் வயிற்றுக் கோளாறு.

ஜ.ரா.விற்கு இது வழக்கிற்கான விடயம். ஆனால் எமக்கு தினமும் உயிரை வைத்திருப்பதற்கான போராட்டம்.

மஹ்முத் தர்வீஷ், தஸ்லிமா நஸ்ரீன், பாலஸ்தீனக் கவிஞர்களை ஜ.ரா. இவ்வளவு விரைவில் கைவிட்டது நல்லதுக்குத்தான். யிஸ்மல் குணே ஏற்கனவே செத்தான்.

எல்லாம் தெரிந்த இந்தியத் திமிர்த்தனம் அப்போது வண்ணநிலவன் வாயால் வெளிப்பட்டுத் தன்னைத் தோலுரித்துக் கொண்டது. பின் வண்ணநிலவனே அதுபற்றிப் பேசுவதில்லை. இன்றோ நிலைமை வேறு. தலித்தியப் படைப்புகளாகட்டும், இ.பா.வின் வேதபுரத்து வியாபாரிகளாகட்டும், பொன்னீலனின் புதிய தரிசனங்களாகட்டும். அதன் அரசியல் முக்கியத்துவத்திற்காகவே தமிழில் சிறப்புப் பெறுகிறது.

நேரம் கிடைக்கும்போது கவிதை எழுதும் யாருக்கும் ஜ.ரா. நினைப்பு வராமல் போனது இயல்பானது. அவரது இந்தக் கட்டுரைக்கான நேரம் இதைவிடக் குறைவாகத் தான் நிச்சயமிருக்கும். அவ்வளவு மோசமானது. இனிக் கொஞ்ச நேரம் கிடைத்தால் அவருக்கு எழுதிப் போடுங்கள். குடும்ப சமேதராய் வந்து பயணுறும் வழிகளில் பொழுதை உங்களுடன் கழிப்பார். எழுத்தின் நெருக்கடிகளை எங்கள் அனைவரிலும்விட அதிகம் விளங்கியவர் அவர். அவ்வளவு மென்னுணர்வு உள்ளவர்.

ஒரு விடயம் குறித்த மேம்போக்கான அறிவுடையவனை 'புல்லறிவாளன்' என அழைப்பதுண்டு. ஈழத்தில் இருக்கும் போது ஈழத்து இலக்கியம், ஐரோப்பாவிற்கு வந்தபிறகு புகலிட இலக்கியம் என்ற அரவரி அடிப்படைகளை இனியாவது தவிருங்கள்.

சுகன்,
பிரான்ஸ்.

---

ஆசிரியர்,
சுவடுகள்.

அண்மையில் யமுனா ராஜேந்திரன் எழுதிய புலம்பெயர் இலக்கியம் பற்றிய குறிப்புகள் சுவடுகளில் படிக்கக் கிடைத்தது. உண்மையில் ஈழத் தமிழர்கள் எழுதியிருக்க வேண்டிய கட்டுரை. எம்மவர்கள் பொறுப்பற்று இருந்தமையால் அவர் எழுதினாரோ என்னவோ, சில விடயங்களைக் கவனமாக அவதானித்துத்தான் எழுதியுள்ளார். புலம்பெயர் இலக்கியம் பற்றி மும்முரமாகத் தாக்குதல்கள் தொடுக்கப்படும் சமயத்தில் வந்த பொருத்தமான கட்டுரை. புலம்பெயர் இலக்கியத்தின் சகல பக்கங்களையும் விமர்சனத்துக்கு உட்படுத்த வேண்டும். ஒன்றில் துதிபாடுகிறார்கள், அல்லது தூஷணை பேசுகிறார்கள். புலம்பெயர் இலக்கியத்தின் அடிப்படையே அரசியல்தான். நான் படித்தவற்றுள் மௌனம், சுவடுகள், ஓசை என்பனவே புலம்பெயர் இலக்கியம் தன்னைச் சுயவிசாரணை செய்ய வேண்டும் என நிதானமாக எழுதின. ஏனையவை திட்டலும், வாழ்த்தும்தான். பல புலம்பெயர் சஞ்சிகைகள் நின்ற நிலையில் திட்டல் சற்றே பலமாகக் கேட்கிறது. திட்டுபவர்கள் வாசித்துத்தான் திட்டுகிறார்களோ, யாரைத் திட்டுகிறார்கள் என்பதைத் தெரியப் படுத்தினால் நல்லது.

செய்வார்களா?

**இந்த விடயம் தொடர்பாக ஏனைய வாசகர்களும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.**

ந.வசந்தி,
பேர்லின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழகப் பார்ப்பனீயம் : 3




"தமிழ்" என்று சற்று அழுத்திச் சொன்னாலே ஆத்திரம் கொள்ளும் இந்தத் தமிழ்ப் பிராமணர்கள் தமிழ் மொழியையே தங்கள் அடையாளமாகக் கொண்ட ஈழத்தமிழர்களான எங்களையும், எங்களின் போராட்டத்தையும் நரம்புகள் புடைக்க வெறுக்கின்றார்கள்; எதிர்க்கின்றார்கள் என்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. எனினும் தமிழகத்தின் தமிழ் காக்கும் தளபதிகளின் வஞ்சகத்துடன் ஒப்பிடுகையில் தமிழகப் பிராமணர்கள் ஈழத்தமிழர்பால் கொண்டிருக்கும் வெறுப்பும், விரோதமும் வெளிப்படையானது; நேர்மையானது. காரணங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

ஈழத்தமிழர்பால் அனுதாபம் கொள்வதற்கு ஏதாவது காரணம் வேண்டுமே. தமிழகத்தின் குப்பனுக்கும், சுப்பனுக்கும் ஈழத்தமிழருக்கும் இருக்கும் இன, மொழி, கலாச்சார உறவு தமிழகப் பிராமணர்களுக்கும் ஈழத்தமிழருக்கும் இடையில் இலை. குப்பனையும், சுப்பனயுமே பார்த்து அருவருக்கும் தமிழகப் பிராமணர்கள் அடுத்த நாட்டிலிருக்கும் ஈழத்தமிழருக்காகவா இரங்கப்போகிறார்கள்? ஆங்கிலம், கலந்து கொஞ்சம் தமிழ் பேசுகிறார்கள் என்பதற்காக சில புள்ளிவிபரங்கள் என்னையும்- "சோ" ராம்ஸ்வாமியையும் ஒரே இனத்தவர் என்று பிரிக்கும் கொடுமையைச் செய்துவிடுகின்றனர். இது ஆங்கிலம் பேசுகிறார்கள் என்பதற்காக ஆபிரிக்க கறுப்பன் ஒருவனையும்,

www.tamilarangam.net

ஆங்கிலேயன் ஒருவனையும் ஒரே இனம் என்று கூறுவதை ஒத்ததாகும். அரசியல் நெருக்கடிகள் அவர்களைச் சிலவேளை தமிழர்கள் என்று சொல்ல வைக்கின்றது. குறிப்பாக, அவர்கள் என்னதான் ஹிந்தியை வணங்கினாலும் வட இந்தியாவில் அவர்கள் மதராஸிகள் என்றே இழிவு செய்யப்படுவதால், "நாங்கள் இந்தியர்கள் மட்டுமே" என்ற அவர்களின் பிரகடனத்திலிருந்து விட்டிறங்கி சிலவேளைகளில் தாங்களும் தமிழர்கள் என்று சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டு வருகின்றது. ஆனால் இந்த நிர்ப்பந்தம் சிலவேளை மட்டக்களப்பைச் சேர்ந்த இராமசாமியும், மயிலாப்பூரைச் சேர்ந்த ராம்ஸ்வாமியும் தமிழர்கள் என்று அடையாளங்காட்டப்படும்போது (குறிப்பாக வெளிநாடுகளில் அடிக்கடி இடம் பெறுவதுண்டு) அம்பி ராம்ஸ்வாமி அபச்சாரம் அபச்சாரம் என்று தலையிலடித்துக்ககாண்டு படுகின்ற வேதனையை யாரறிவார்? சரி. இன, கலாச்சார உறவுகள் வேண்டாம். வேறு தொடர்புகள்? மதம்? அங்கும் பிரச்சினை. ஈழத்தமிழர் வாழ்வியலில் மதத்தின் பாதிப்பு மிகமிகச் சிறியதே. ஈழத்தமிழரின் தந்தை செல்வா ஒரு கிறித்தவர். ஈழத்தமிழின் தந்தை அடிகளார் தனிநாயகம் ஒரு கத்தோலிக்கர். ஈழத்தின் சைவர்கள்கூட இந்திய இந்து வெறித்தனத்திலிருந்து மிகவும் விலகியே இருக்கிறார்கள். சரி அதுவும் அவண்டாம். வேறேதாவது தொடர்பு? உலகின் இரண்டு கோடிகளில் வாழும் இரண்டு முஸ்லீம்களுக்கிடையிலான உறவுபோல, இரண்டு மார்க்சிஸ்ட்டுகளுக்கிடையிலான உறவு போல ஏதாவது? அதுவுமில்லை. சரி. இவைகள் எதுவும் வேண்டாம். மனிதாபிமானம்!. மனிதாபிமானம் இன, மத பேதங்களைக் கடந்து மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானது. பெருந்துயரோடு போராடுகின்றவர்கள் என்ற அடிப்படையில் ஈழத்தமிழர்கள்மீது பரிவு கொள்ளலாமே! ஆனால் அங்கும் பிரச்சினை. பார்ப்பனீயத்தில் மனிதாபமானம் என்ற பேச்சுக்கே இடமில்லை. **Very Sorry!** சோ விரும்பினாலும் அவரது சாதி மனிதாபிமானம் பற்றியெல்லாம் சிந்திக்கவிடாது. ஆக தமிழகப் பிராமணர்களுக்கும், ஈழத்தமிழருக்குமிடையில் எதுவுமில்லையா? இருக்கிறதே! விஷம் பூசிய வெறுப்பு.

இரண்டொரு ஆண்டுகளுக்கு முன் பார்ப்பன (ஆனந்த) விகடன் தன் ஆசிரிய தலையங்கத்தில் தமிழ் ஈழம், இந்திய வல்லரசின் மூச்சுப்பட்டாலே ஆடக்கூடிய அந்தச் சின்னஞ்சிறு தேசம், இந்தியாவின் பாதுகாப்புக்கு ஒரு ஆபத்து என்று தமிழக மக்களை எச்சரித்தது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா? பார்ப்பனீயம் எவ்வாறு காய்களை நகர்த்துகிறது என்பதற்கு இது ஒரு பொருத்தமான உதாரணம். ஒரு கல்லில் பல மாங்காய்களை வீழ்த்தும், பாரம்பரீய பார்ப்பனீய தந்திரம். தமிழர்களுக்கென்று ஒரு தனிநாடு கிடைத்துவிட்டால் தமிழர்களிடையே நிச்சயமாக உருவாகப்போகும் சுதந்திரப் பெருமிதம் கலந்த இனவுணர்வு தங்களுக்குப் பெரும் பாதகமாக அமையும் என்ற அச்சம் முதலாவதாகும். தற்சமயம் தமிழகத் தமிழர்கள் "அஜக்கு என்னா அஜக்குத்தான், குமுக்கு என்னா குமுக்குத்தான்" என்றவாறு ரஜனிகாந்தின் பின் அலைகின்றபோதும் தமிழீழ விடுதலை அவர்களின் போக்கில் பெருந்திருப்பத்தையும், விழிப்புணர்வையும் தரும் என்பது

www.tamilarangam.net

அவர்களுக்குத் தெரியும். மூவாயிரம் ஆண்டுகளாக தமிழகத்தில் வாழ்ந்தபோதும் தங்களைத் தமிழர்களாக அடையாளம் காணாமல் பிராமணர்களாகக் கருதி வாழ்ந்தமையினால் தமிழர்களுக்கு ஒரு தனிநாடு என்கின்ற விடயம் அவர்களில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை. ஆனால் அதனால் தீவிரமாகும் இனவுணர்வு வெள்ளம் தங்களை அடித்துச் சென்றுவிடும் அவர்கள் கருதுவதனால், தமிழீழம் என்று ஒரு நாடு தோன்றிவிடாதிருக்க தங்களால் என்னென்ன செய்யமுடியுமோ அவற்றையெல்லாம் தமிழகப் பிராமணர்கள் செய்துவருகிறார்கள்.

பறையன் என்று ஒருவனைச் சுட்டுதல் ஒரு மனிதனை இழிந்தவனாகக் காட்டும் நோக்கிலாகும். ஆனால் பிராமணன் எனப்படும்போது ஒரு பலம் வாய்ந்த நிறுவனத்தின் அங்கத்தவன் என்பதையே குறிக்கும். பார்ப்பனீயம் பதிவுசெய்யப்படாத ஒரு பலம்வாய்ந்த நிறுவனமாகும். எத்தனை ஆயிரம் ஆண்டுகளானாலும் அசைக்க முடியாத கொள்கைகளாலும், நம்பிக்கைகளாலும் தீவிர விசுவாசம் மிக்க அங்கத்தினராலும் வனையப்பட்ட அமைப்பு அது. தமிழீழமும், ஈழத்தமிழர்களும் இந்த நிறுவனத்துக்கு விரோதமானதென்று முடிவு செய்யப்பட்டால் டெல்லியிலிருந்து தமிழ்நாடுவரை பிராமண இயந்திரம் தனது பணியைத் தொடங்கிவிடும். ஆனந்த விகடன் தலையங்கம் இந்தப் பணியின்பாற்பட்டதே. கவனித்துப் பாருங்கள், எவ்வளவு தீர்க்க தரிசனத்துடனும், கூர்மையுடனும் குழிதோண்டுகிறார்கள் என்பதை. இலங்கை அரசால் தமிழர்களின் போராட்டத்தை நசுக்கமுடியாது என்றாகிவிட்ட இந்நிலையில் தமிழீழம் உருவாவதைத் தடுக்க இந்தியாவால் மட்டுமே முடியுமென்பதே எண்கணித ரீதியான இன்றைய கணிப்பீடு. இந்நிலையில் இந்தியாவை இலங்கைக்குத் துணைபோக வைப்பதனாலோ, அல்லது நேரடியாக தமிழீழத்துடன் மோத வைப்பதானாலோதான் இது சாத்தியமாகும். ஆனால் இந்த இரண்டில் எந்த ஒன்றைத் தெரிவு செய்வதானாலும் தமிழக மக்களை உசுப்பிவிடாத வகையில் செய்யவேண்டும். இல்லையானால் ஈழத்தில் கிணறு வெட்ட தமிழகத்தில் பூதம் கிளம்பிய கதையாகிவிடும். ஆக தமிழக மக்களை ஈழத்தமிழருக்கும், தமிழீழத்துக்கும் எதிராக மனம் மாறச் செய்தால்தான் இது சாத்தியம். எனவேதான், தமிழீழம் இந்தியாவுக்கு எதிரானது; தமிழீழவர்கள் மோசமானவர்கள் என்பது போன்ற பிரச்சாரங்களில் தமிழக மக்களின் மனமாற்றத்தை ஏற்படுத்தினால், நாளை இந்தியா ஈழத்துக்கெதிராக இறங்கும்போது தமிழக மக்கள் அதைக் கண்டுகொள்ளாதிருப்பார்களல்லவா?

“சோ” ராம்ஸ்வாமியைச் சபிக்காத ஈழத்தமிழர்கள் இருக்கவேமாட்டார்கள். ஆனால் சமஸ்கிருதத்தில் அல்லாமல்-தமிழில் சபிப்பதால் இந்தச் சாபங்கள் அவரிடம் பலிப்பதில்லை. சோவின் பார்வைபட்டாலே ஈழத்தமிழன் எரிந்துபோவான் என்று ஒரு இன்றைய “ஐதீகம்”. அந்தளவு குரூரமானவர். சினிமாக் கோமாளியாக இருந்து இன்றைய தமிழகத்தின் அறிவுச்சுடராக ஒளிவிடும் ஆர்.எஸ்.எஸ்காரர். அவரின் கருத்துப்படி ஈழத்தமிழர்கள் “காலைச்சுற்றிய பாம்புகளாம்”. இவரை பிராமண சினிமாக்காரரான பாலச்சந்தர், குமுதத்திற்காக பேட்டிகண்டபோது இந்தியப்படை ஒரு கையைக் கட்டியபடி

www.tamilarangam.net

போரிட்டதால் வெல்லமுடியவில்லையென்றும், சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட்டிருந்தால் ஈழப்பிரச்சினை தீர்ந்திருக்கும் என்று கூறினார். ஒரு கையைக் கட்டிக்கொண்டே இந்தியப்படையால் ஏழாயிரம் ஈழமக்களைக் கொன்று, பல நூறு பெண்களை பாலியல்வதம் புரியமுடிந்ததென்றால் சுதந்திரமாக இயங்கியிருந்தால் தமிழர்களே இல்லாமல் போயிருப்பார்கள். சோ சொன்னது போல ஈழப்பிரச்சினையில்லாமல் போயிருக்கும்தான்!

இந்தப் பாலச்சந்தர் ஈழமக்கள் விரோதப் பணியின் முன்னோடிகளில் ஒருவர். இவரின் புன்னகை மன்னனை மறந்திருவோமா? ஈழத்தமிழர்களை கொடிய வில்லன்களாக சித்தரித்த இவரது படத்தை இலங்கை இராணுவத் தொலைக்காட்சி எண்ண்ணிலங்காத தடவைகள் போட்டு மகிழ்ந்ததை மறப்போமா? இப்படத்தின் கதையை எழுதிய இன்னொரு பிராமணர் பாலகுமாரன். இவர் தனது கதையொன்றில் எங்கள் பெண் போராளிப் பெண் ஒருத்தியுடன் உறவு கொண்டு தன்னால் முடிந்தளவு குலப்பணிசெய்கிறார். அவரின் பத்தினி மனைவி, அந்தப் போராளிப் பெண்ணின் தமிழைக் குறிப்பிட்டு "என்ன தமிழோ! மலையாளம் மாதிரி" என்று அலுத்துக் கொள்கிறாராம்.

சில வாரங்களுக்கு முன்வந்த சின்ன விகடனைப் (27.8.95) புரட்டி, 16ம் பக்கம் பாருங்கள். விறைத்துப் போவீர்கள். அதிலுள்ள கட்டுரையை எழுதிய பிரகாஷ் எம்.ஸ்வாமி என்பவர் என்ன ஜாதியைச் சேர்ந்தவர் என்பதுபற்றி நான் எங்கும் வாசித்தறியமுடியவில்லை. ஆனால் அந்தக் கட்டுரையிலுள்ள அயோக்கியத்தனமான பொய்களையும், நயவஞ்சகப் பிரச்சாரத்தையும் வாசிக்கும்போது இந்த பிரகாஷ்.எம்.ஸ்வாமி என்பவர் ஒரு பிராமணரே என்று நூறுவீதம் அடித்துச் சொல்வேன்.

**பின்வரும் பார்ப்பனீயப் பொய்களைக் கவனியுங்கள்.**

1. பாகிஸ்தானிய உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ இந்தியாவுக்கெதிராக விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களையும், அமெரிக்க டொலர்களையும் அள்ளிவழங்குகிழது.

2. பாகிஸ்தான் விமானப்படையினர் செலுத்தும் இலங்கைப் போர்விமானங்களை, அதே பாகிஸ்தானிய ஐ.எஸ்.ஐ கொடுத்த ஏவுகணைகளால் விடுதலைப்புலிகள் தாக்குகின்றனர்.

3. பாகிஸ்தான் இலங்கையைத் துண்டுபோட்டு ஒரு பகுதியை இஸ்லாமிய நாடாக்கி இந்தியாவுக்குத் தலைவலி ககாடுக்க விரும்புகிறது.

4. இதுநாள் வரை தோட்டத் தொழிலாளர்கள் விடுதலைப்புலிகளுக்கு வெளிப்படையாக ஆதரவு தராததற்கு காரணம்- சிங்கள தீவிரவாத இயக்கமான ஜே.வி.பியின்- பயம்தான்.

5. விடுதலைப் புலிகள் கொழும்புவிலும், அனுராதபுரப் பகுதியிலும் உள்ள குடிநீர்த்தேக்கங்களில் விஷம் கலந்து ஆயிரக்கணக்கான மக்களை சாகடிக்கத் தீட்டிய திட்டம் அமெரிக்க சி.ஐ.ஏ. நிறுவனம் மூலமாக இலங்கை அரசுக்கு கூட்டியபோது, அது அதிர்ந்துவிட்டது.

6. புலிகள் தற்போது பயன்படுத்தும் கொரில்லா டெக்னிக்குகள் இந்திய இராணுவத்தினரால்

www.tamilarangam.net

1985-ல் கற்றுத் தரப்பட்டன. ஆகவேதான் இலங்கை இராணுவத்தினரால் வேகமாக முன்னேற முடியவில்லை.

8. புலிகளுக்கு ஆதரவாக பாகிஸ்தான் அனுப்பிய கப்பல்கள் பயன்படுத்தப்பட்டுவருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

9. விடுதலைப் புலிகள் தமிழ்நாடு, கேரளா, அந்தமான், மொரீசீயஷ், ஆகிய இடங்களிலுள்ள தமிழர்களை கூலிப்படைகளாக அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்கின்றனர்.

10. ஜெயலலிதா அரசை மத்திய ஆரசு கலைத்தால் தமிழகத்தில் விடுதலைப்புலிகள் மிகப் பெரும் சேதம் விளைவிக்கத் தயங்கமாட்டார்கள்.

இதைப் படித்ததும் ஈழத்தமிழர் ஒருவருக்கு இந்த பிரகாஷ்.எம்.சுவாமி ஒரு பைத்தியம் என்றோ அல்லது ஒரு மாங்காய் மடையனென்றோ எண்ணத்தோன்றும். பொய்யைக்கூட ஒழுங்காகச் சொல்லித்தெரியாதளவுக்கு இப்படியும் முட்டாள்கள் இருப்பார்களா என்று தோன்றும். ஆனால் உண்மையென்னவென்றால், அவர் முட்டாளோ அல்லது பைத்தியமோ அல்ல. தமிழக மக்களை நன்கு புரிந்து வைத்திருக்கின்ற திறமைசாலியான ஒரு பத்திரிகை வியாபாரி. ஏனெனில், ஈழத்தமிழ் வாசகர்களைக் இலக்காகக்கொண்டு எழுதவில்லை. தமிழக வாசகர்களே அவரது இலக்கு. தமிழக மக்களுக்கு அதிலுள்ள தர்க்கப் பிழைகள், தகவற் பிழைகள், பொய்கள்பற்றி எதுவும் தெரியாது; இது உண்மையா பொய்யா என்று வேறு மூலங்களுடன் ஒப்பு நோக்குமளவு சீரியசானவர்களாக அவர்கள் இல்லை என்பதும் தெரியும். எனவே தான் என்ன எழுதினாலும் தமிழக மக்கள் நம்புவார்கள் என்கின்ற தைரியமே அவரை இவ்வாறு எழுதவைக்கிறதேயன்றி, அவர் முட்டாளல்ல. இவர்தான் சின்ன விகடனின் நிர்வாக ஆசிரியர். பல இலட்சங்கள் விற்பனையாகும் இப்பத்திரிகை மேலும் பலலட்சம் பேரால் வாசிக்கப்படுகிறது. உங்களை ஒரு தமிழகத் தமிழராக கற்பனைசெய்து கொண்டு, இந்தக் கட்டுரையை ஒரு முறை வாசித்துப்பாருங்கள். ஈழத்தமிழர்மீது எவ்வளவு வெறுப்பு வருகிறது! இதுதான் ஸ்வாமிகள் சாதிக்குத் தேவை. இந்த வெறுப்பே அபிப்பிராயங்களாக, தேர்தல் முடிவுகளாக, அதன் மூலம் இந்திய அரசின் வெளிவிவகாரக் கொள்கைகளாகமாறி தமிழீழத்தில் தீ வைக்க வாய்ப்பாகும். இதனையடைய இந்த ஸ்வாமிகள் எந்த இதழியலறத்தையும் கற்பழிக்கத் தயார் என்பதையே இது காட்டுகிறது. அத்தோடு இன்னொரு முக்கியமான சதியையும் அவதானிக்கலாம். இந்தியாவில் பாகிஸ்தான் என்ற பெயருக்கு இருக்கும் வெறுப்பையும், விரோதத்தையும் கருத்தில்கொண்டு, பாகிஸ்தானும் புலிகளும் கூட்டாக இந்தியாவுக்கெதிராக இயங்குகிறார்கள் என்றும், தமிழீழம் என்பது இன்னொரு பாகிஸ்தான் என்றும் சித்தரிப்பதன் மூலம், தங்களின் இரண்டு விரோதிகளுக்கெதிராக தமிழக மக்களையும் தயார்ப்படுத்தும் நரித்தனத்தையும் காணலாம்.

இந்தியா டுடேயைப் பாருங்கள்!. சிரித்தபடியே கத்தியைச் சொருகும் வாஸந்தியின் மதிநுட்பத்தை அவதானிக்கலாம். இலங்கை இராணுவத்தின் வெற்றிகளை, இலங்கை அரசின் பிரச்சாரங்களை அட்டைப் படமாகவும், வசீகரமான வடிவமைப்புடனும் பிரசுரிக்கும் வாஸந்தி,

www.tamilarangam.net

எங்களுக்குச் சாதகமான அல்லது எங்கள் போராட்டத்தின்பால் அனுதாபத்தையோ, நியாயத்தையோ ஏற்படுத்தவல்ல செய்தியாயின் அதை உருக்குலைத்து ஒரு மூலைக்கு ஓரங்கட்டி விடுவதைக் கவனியுங்கள். அவரின் இலங்கைப் பிராமண நிருபரான ஜெயராம் என்ற புண்ணியவானுக்கு எங்கள் அரசியல் பிரச்சினையின் அடி, நுனி கூட ஒழுங்காகத் தெரியாது. ஊரின் பெயர்களைக்கூட ஒழுங்காக எழுதத்தெரியாது. ஏதோ அவரின் மூளையில் உதிப்பதை கோணல் மாணலான தலையங்களுடன் எழுதி, இலங்கை அரசு நீதியானது; ஆனால் தமிழர்கள்தான் பிடிவாதம் பிடிக்கிறார்கள் என்று காட்டிவிட முயற்சிப்பார்.

சுஜாதா ஆசிரியராக இருந்த கொஞ்சக்காலத்தில் குமுதம் ஈழத்தமிழர் விடயத்தில் ஓரளவு மனச்சாட்சியுடன் நடந்து கொண்டது. ஆனால் மீண்டும் மாலன் வந்ததும் ஈழத்தமிழர் எதிர்ப்பை ஆரம்பித்துவிட்டது. இவர் சோ-வுக்குப் பின் ஈழத்தமிழர் விரோதப் பணியை தலைமையேற்கவிருப்பவர் என்று கருதப்படுபவர்.

ஹிந்துராம் என அழைக்கப்படுகின்ற (முன்னாள் ஹிந்து) புரண்ட்லைன் ஆசிரியர் என்.ராம் பார்ப்பனீய குள்ளத் தனத்தின் மறுவடிவம். இலங்கை முழுவதையும் கைப்பற்ற எங்கள் போராளிகளுக்கு ஆலோசனை கூறிய இவர், இன்று இலங்கை அரசின் தமிழர் விரோதப் பிரச்சாரத்தின் இந்தியப் பிரதிநிதியாக செயற்படுவர். ஈழத்தமிழரின் இரத்தத்தில் குளித்த காமினி திசநாயாக்காவின் உயிர் நண்பர். இன்று தென்னிலங்கை சிங்கள இனவாதப் பத்திரிகைகள் இவரின் கட்டுரைகளை பேரார்வத்துடன் மறுபிரசுரம் செய்கின்றன. கட்டுரையின் அடக்கம் வேண்டி ஏனைய பார்ப்பனீயப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இவற்றை நடாத்துகின்றவர்கள் பற்றி மேலும் விபரிக்காது விடுகிறேன். இங்கு நான் காட்டியது இவர்களின் அயோக்கியத்தனத்தில் இலட்சத்தில் ஒன்றிரண்டே.

தமிழகம் பற்றிய ஒரு கண்மூடித்தனமான, பாசம் மிகுந்த அபிப்பிராயமே ஈழத்தமிழர்களுக்கு இருந்து வந்தது. அதன் உட்கூறுகள் பற்றி ஒரு தெளிவான, நுணுக்கமான பார்வை இருக்கவில்லை. அங்கிருப்பவர்கள் எல்லாருமே தமிழர்கள், நம்மவர்கள், நமக்கு ஆதரவானவர்கள் என்ற மேலெழுந்த கணிப்பீடே இருந்தது. எண்பதுகளின்பின் ஏற்பட்ட நெருங்கிய தொடர்பு, இந்தியா எமது மண்ணில் நடாத்திய அட்டூழியம் ஆகியவை இந்தியா, தமிழகம் பற்றிய உண்மைகளைக் கற்பித்துள்ளது. தமிழகப் பார்ப்பனியம் என்ற இந்த கூறு பற்றி, அண்மைக் காலம்வரை எம்மவர்களிடையே பெரும் கவனம் இருக்கவில்லை. வாஸந்தியோ (இந்தியா டுடே), மாலனோ (குமுதம்), பிரகாஷ் ஸ்வாமியோ (யூனியர் விகடன்). ராம்ஸ்வாமியோ (துக்ளக்) எங்களின் மீது வசைகளை எழுதமுடியுமே தவிர, எங்களின் வரலாற்றை இவர்களால் எழுதமுடியாது. எங்களுக்கு விடிவு கிடைக்கவேண்டுமென்பதே வரலாற்றின் நியதியாக இருந்தால் அதை எவராலும் தடுக்க முடியாது. ஆனால் நாம் வென்றாலும் சரி, தோற்றாலும் சரி எங்கள் வரலாற்றில் தமிழகப் பார்ப்பனீயம் பற்றியும், அதன் நயவஞ்சகத்தனம் பற்றியும் ஏராளம் பக்கங்கள் இருக்குமென்பது மட்டும் நிச்சயம்.

**அன்பரசன்.**

www.tamilarangam.net

# சுவடுகள்

## நாலு அம்சக் கோரிக்கையை அங்கீகரி!!

சிங்களப் பேரினவாதத் தாக்குதல் யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதில் மாத்திரமல்ல, முற்றாகத் தமிழ் மக்களையும் அவர்களது அரசியற் கோரிக்கைகளை அழித்துவிடுவதிலும் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது. எல்லாவற்றையும் இழந்துவிட்ட அகதிகளாக வாழும் ஐந்துலட்சம் பேர்வரையிலான தமிழ் மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமற்று உணவு, மருந்துத் தட்டுப்பாடுகள், மழையில் பாதுகாப்பாகத் தங்க இடமின்மை, குண்டுத் தாக்குதல்கள் போன்றவற்றின் இடையில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.
உணவு, மருந்து போன்றவற்றை வடபகுதி மக்களுக்கு அனுப்பாது தடை உத்தரவை நடைமுறைப்படுத்தியபடியே சந்திரிகா அரசு சமாதானம் பற்றிப் பேசிக்கொள்கிறது. அகதிகள் நிலை மோசமடைந்துள்ளது, உடன் உலக நாடுகள் உதவவேண்டும் என்ற ஐ.நா. செயலரின் கோரிக்கையைக்கூடச் சந்திரிகா அரசு திமிருடன் மறுத்துள்ளது. இன்னொரு நாட்டுக்குக் குடிபெயர்ந்தாலேயே அகதிகள் என்று புதுச் சித்தாந்தம் பேசி அகதிகளைப் பட்டினிச் சாவுக்கு நிர்ப்பந்திக்கிறது. இனப்பிரச்சனைக்குத் தீர்வுத் திட்டம் என்ற பெயரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள வெறும் மாகாணங்களுக்கு உள்ள அதிகாரங்களைப் போன்ற ஒரு திட்டத்தை ஏகாதிபத்திய நாடுகளின் ஆசியுடன் காட்டிக் காதிற் பூ வைக்க முனைகிறது.
இராணுவத் தீர்வு முற்றுமுழுதாக எதிர்க்கப்பட வேண்டியது. இராணுவத் தீர்வு, அடக்குமுறையின் வடிவமேயன்றி வேறல்ல. இராணுவத் தீர்வு தமிழரை அழிப்பதற்கான பாரிய சதியே. புலிகளை மாத்திரம் அழிப்பது என்றொரு யுத்தம் இல்லை. யுத்தம் தமிழ் மக்களையும், தமிழ் மக்களது சொத்துகளையும் அழிப்பதையே நோக்கமாகக் கொண்டது என்பதை யாழ்ப்பாணத்தைப் பிடிப்பதற்காக அரசு நடாத்திய போர் இன்னொரு முறை தெளிவாகக் காட்டியுள்ளது. இராணுவத் தீர்வு மூலம் எந்த இலக்கையும் அடையமுடியாது என்பதையும் அரசியல் முட்டாள்களுக்கு இன்னொரு தரம் நிரூபித்திருக்கிறது யாழ்ப்பாண யுத்தம்.
அரசியற் தீர்வு ஒன்று மாத்திரமே இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும். அதற்கு

www.tamilarangam.net

அடிப்படையாக, பத்து வருடங்கள் முன்பே தமிழ்ப் பிரதிநிதிகளால் திம்புவில் முன்வைக்கப்பட்ட, சுயநிர்ணய உரிமை உட்பட்ட நாலு அம்சக் கோரிக்கைகள் குறைந்தபட்சமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இத்தோடு முஸ்லீம், மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இதைத் தவிர்ந்த எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.
இதற்காக வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு தமிழர்களும் தங்களால் முடிந்தளவு முயற்சிக்குமாறு சுவடுகள் அறை கூவல் விடுக்கிறது.

## நீதிக்குக் குரல்கொடு!

சிங்களப் பேரினவாதத் தீ தமிழர்களை அழித்துத் துவம்சம் செய்துகொண்டிருக்கிறது. இதை எதிர்த்த எமது போராட்டம் நீதிக்கானது என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. நீதிக்காகப் போராடும் நாம் நீதியுடன் நடக்க வேண்டும். மற்றவர்கட்கும் நீதியை வழங்கவேண்டும். அண்மையில் தமிழ்பேசும் முஸ்லிம் மக்கள் பலர் தமது சொந்த மண்ணான திருகோணமலையில் இருந்து துரத்தியடிக்கப் பட்டுள்ளனர். ஒக்டோபர் மாதம் தமிழ் மக்கள்மீது வடக்கே பாரிய யுத்தம் ஒன்றை அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளபோது, தமிழர் பிரதேச எல்லைக் கிராமங்களில் வாழ்ந்த சிங்கள மக்கள் பலரைத் தொடர்ச்சியாகக் கொலை செய்வதில் தமிழ் இயக்கம் ஒன்று பின்னணியில் உள்ளது. இவ்விரு செயற்பாடுகளும் ஏற்கப்பட முடியாதவை ஆகும். சிறுபான்மையில் சிறுபான்மையான முஸ்லிம் மக்கள் விரட்டப்பட்ட நிலை, நீதியை வேண்டிப் போராடும் நாமே இன்னொருவருக்கு நீதியை மறுக்கும் இரட்டை நிலையாகும். இது எமது போராட்டத்திற்குச் சர்வதேச ரீதியாகச் சிறுமையைத் தேடித் தருவது மட்டுமல்ல சிங்களப் பேரினவாதம் போன்றே தமிழ்ப் பேரினவாதமும் சிறுபான்மை மக்களை ஒடுக்கும் சக்தியாக வளர்ச்சி பெற்று வருவதையே புலப்படுத்துகின்றது.
அதேபோல் சிங்கள மக்கள் படுகொலையானது, - அது குடியேற்றவாசிகள் எனக் கூறப்பட்டாலும் - இனவாத அரசு அப்பாவித் தமிழர்களை அழிக்கிறது, ஆகவே நாமும் சிங்களவரை அழிப்பதில் என்ன தவறு என்ற ரீதியில் நியாயப்படுத்தப்பட முனைவதும் தவறாகும். இதற்கு மாற்றீடாக அரசியல் வழிமுறைகளையும் சர்வதேச அழுத்தங்களையும் பிரயோகிக்க வேண்டும். எமது கண்களைத் தமிழ் இனவாதம் மூடித் திரையிடுமாயின் உலகின் கண்கள் விழித்துக்கொண்டு எமது நியாயத்திற்கான போராட்டத்தைப் புறந்தள்ளி நலிவடையவே செய்யும். இதனைக் கருத்திற் கொண்டு இத்தகு செயல்களைக் களைவதன் மூலம் எமது போராட்டத்தினைச் சர்வதேச அரங்கில் முன்னுயர்த்த அனைத்துத் தமிழர்களும் விழிப்புடன் செயற்பட்டாலே முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## திறமைக்கும் இடமுண்டு
## அது சந்திர சூரியராகும



அறிமுகம் செய்பவர்: க.வணங்காமுடி

அத்தியாயம் 2

# கவிதைத் திறமையும், சமூக - கலாச்சாரக் கட்டுக்கோப்பும்

அத்தியாயம் ஒன்றில் குடிமகன், பொதுமகன் எனும் புனைபெயர்களில் வாழ்ந்திடும் சந்திரசூரியர் திறமை கொண்டவர் என்ற எம் கூற்றினை "செம்மனச் செல்வி." என்ற அவர் கவிதையினூடாகச் சான்று பகர்ந்திருந்தோம். இக்கவிதை, அவரது படைப்புகளை மேலும் கண்டிட வேண்டும், அனுபவித்திட வேண்டும் என்ற அவாவை எமதெல்லோர்க்கும்தானே தூண்டியிருந்தது.
இங்குதான் பொறுமை தேவைப்படுகிறது எம்மெல்லோர்க்கும்! அது குறித்தும் ஒரு கேள்வி. அடுத்துவரும் எனது அத்தியாயங்களில் எமது அவாக்களைச் சிறிது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவுமா? அல்லது பேயெனத் தூண்டி எம்மை அலையவைக்குமா? பொறுத்துப் பார்ப்போம்.
இவ்விடத்தில் எம்மைச் சிறிது சுதாகரித்துக் கொண்டு நாம் தொடக்கத்தில் எழுப்பியும், அதேவேளை மெதுவாக தட்டிக்கழித்தும் விட்ட அவ்வினாவை மீள்பார்வை செய்யவேண்டி உள்ளது. அதுதான், "திறமை". என்ற அடிப்படையிலான பிரிவுகள் பற்றியது.
கவிஞர் சந்திர சூரியரது மேற்கண்ட கவிதை, குறைந்த பட்சம் இலக்கியப் பாங்கினில் திறமை என்ற வாதத்திற்கு இடம் உள்ளது என்பதை ஊர்ஜிதம் செய்கிறது. ஆனாலும் இத்திறமை என்பது சமூக - கலாச்சார முறையில் கணிப்பீடு செய்யப்படும்போது எவ்வாறு ஏற்றுக்கொள்ளக்கூடியது? என்பது கடினமாகத்தான் உள்ளது.
உதாரணமாக, பழைய மாறுபட்ட மானிடத்திற்கே சோர்வு தரும் (Boring) முத்திரைகளை அந்த சமூக - கலாச்சாரப் பச்சை மச்சங்களை (Tatoo) முதுகுகளிலிருந்து அகற்றி, நம்மை சுத்திகரித்துப் புனிதமாக்கி, "நான் ஒரு சோசலிசப் புலவன்." எனப் புழுவிலிருந்து புத்துயிருடன் பிறந்திடும் வண்ணத்துப் பூச்சிபோல், சமூகத்தின் மத்தியிலே புதுநாமம் தரித்து உதித்தெழும்போது உடலுள்ளே எழுந்திடும் இன்ப எக்காளம், "உடலுடலோடு சேரும் இன்பத்திலினிது" என எக்காளம் செய்கிறார் புலவர் செங்குட்டுவன். இப்படியாக சோசலிசப் புலவர்களென்ற உணர்விலும், அறிவிலும், குறிக்கோள்களிலும் இணைவு கண்டுள்ளதுடன், இன்ப அனுபவங்களிலும் பொது ஞானம் கொண்டுள்ள மக்கள் திரளை திறமை என்ற கோடாலியால் எப்படித்தான் வெட்டித் துண்டாட மனம் வரும்? முயற்சி செய்தாலும் முடியுமா?
பதில்காண வேண்டிய கேள்விதான்!
ஆனால் இக்கேள்விக்குப் பதில் தேடும் முயற்சியில், முக்கிய பிற கருமங்களை மறந்திடவும் முடியுமா? மேலைத்தேய நாட்டுப் பெருநகர்களின் குட்டி யாழ்ப்பாணங்கள் இன்று எமது இனங்காக்கும் பணிகளை பொறுப்புடனும், தியாகத்துடனும் வெற்றிகரமாகப் புரிந்துகொண்டுள்ளன என்றால்

www.tamilarangam.net

மிகையாகாது. அதிலும் எமது அகம் இழந்த சோசலிசப் புலவர்களுக்குப் பாரிய பின்புலங்களாக இவையமைந்து ஆற்றிவரும் பணி சொல்லில் விளங்காது. இங்கெல்லாம், 'தடுக்கி விழுந்து தமிழனைக் கண்டால் அவர் ஒரு புலவனாக இருப்பான்' என்று பெருமையாக எம்மினம் எக்களித்து மலர்ந்து போயுள்ளது. ஆனால், இவ்வேளையில் இவ்வகையான பாரிய சமூக கலாச்சாரப் புரட்சிதனை எம்மவர் யாவரும் பூரணமாக ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று மட்டும் எண்ணி வாழாதிருக்க முடியாது. பழமைவாதிகள், பிற்போக்கு வாதிகள், வலதுசாரிச் சைவர்கள் எனப் பலர், பழைய நாகரிகத்தை மீட்டெடுத்திடும் இன்பக் கற்பனைகளுடன் (Romantism) மாற்றங்களுக்கு எதிராகச் சதிகள் புரிந்த வண்ணம் உள்ளமையை என்றும்தான் காணலாம்.
ஒரு உதாரணமாக "என் காதலிக்கு மடல்" என்ற சிவமணிச் செல்வனின் கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் கவிதையொன்றின் சில வரிகளைக் குறிப்பிடலாம்:

சுற்றும் முற்றும் சில்வண்டுபோல் சோசலிசம் பறையும்
சோம்பேறிக் கூட்டமதன் கொட்டம்
சொத்து முத்தான் எம்மின வரலாறு இவர்கையில் மறையும் - தம்பி
அது பரதேசிக் கூட்டமாய் அலைந்திடுவதில் இவர் நாட்டம்
வெறும் வீம்பேற்றி வால்கட்டி நானேயென வலம்வர
போலிச் சோசலிசம் பேசவேண்டும் - நண்பா
நீர்கண்ட புலமைக்கும் சோசலிசச் சோடனை வேண்டும் - மேலேறி
மாற்றார் வாயடைத்து அலச்சியமாய் தட்டிவீசிடும் தெம்புற
கூடவே பெண்நிலைவாதியாக வேண்டும் - அப்பா
அதில் சோதனை அவர் யோனி வேதனைப் பாட்டும் வேண்டும்....


ஒரு சிறு கவிதையின் சில அடிகளுள்ளே மூன்று தடவை சோசலிசம் எனும் பதத்தை சிவமணிச்செல்வன் பாவிக்கும் விதத்திலிருந்து இவரது அரசியல் தளம் எங்குள்ளதென்பது நன்றாகத் துலப்படுகிறது. இவர் எமது பண்டை நாகரிகத்தைப் பெரும் பொக்கிசம் எனக் கருதி ஆரவாரிப்பதையும் அதனைக் காப்பாற்றிடத் தம்பிமார், நண்பர்கள், அப்பாமார் என ஆணினம் முழுவதற்கும் அறைகூவல் விடுப்பதையும் காணக் கூடியதாக உள்ளது.
வேடிக்கை என்னவெனில், 'காதலிக்கு' எழுதப்படும் இம்மடலில் கவிஞர் பெண்ணினம் முழுவதையுமே முற்றாகத் தவிர்த்துக் கொள்வதையும், இவரது பண்டைய வாழ்க்கை முறைகளைக் காப்பாற்ற உதவிக்குப் பெண்ணினத்தின் ஒரு சாராரைக் கூடவும் அழைக்காது போய்விட்டதையும், பெண்நிலைவாதிகள் யாவரும் நான் சுட்டிக் காட்டாமலேயே கண்டுகொண்டிருப்பர். இவற்றைவிட அவர்கள் இலகுவில் ஊர்ஜிதம் செய்திருக்கக் கூடிய, மிகவும் மோசமான விடயமும் இக்கவிஞர் கவிதையூடாக வெளியாகிறது.
மிகவும் குறிப்பாகக் கூறினால்; சிவமணிச் செல்வனைப் பொறுத்தவரை பெண்ணினம் என்பது வெறும் யோனி ஏந்திவரும் ஒரு பிறவிக் கருவிக் கூட்டமே, அதிலும் கேவலம் "யோனிக்கு வேதனை தெரியாது - இன்பத்தை மட்டுமே கிரகித்துக் கொள்ளும்" என இலைமறைகாயாகக் கவிஞர் கொண்டு திணிக்கும் கருத்துக்களுமாகும்.
சிவமணிச் செல்வன்கள் இன்னும் எம்மவரிடையே பல்லாயிரமாக உள்ளனர். இவர்கள் குறித்துத் தமிழீழ சோசலிசப் புலவர்கள் மிகவும் கண்ணுங் கருத்துமாக இருந்துகொள்வதும் எதிர் நடவடிக்கைகள் தக்க தருணங்களில் எடுத்து இவர்களைக் கட்டுக்குள் கொண்டு வருவதையும் காணக்கூடியுள்ளமையால் எமது மக்கள் பாரிய ஏக்கங்கள் பயங்களுடன் வாழவேண்டிய அவசியமில்லாதுள்ளது. ஆனால் இங்கெல்லாம் 'திறமை' பற்றி விவாதித்து வேளையை விரயம் செய்யும் அவகாசம் மட்டும் இல்லையென்று நன்றாகத் தெரிகிறது. ஏனெனில் இந்தக் குட்டி யாழ்ப்பாணங்களில்தான் அதிகளவில் பல சிவமணிச்செல்வன்களும் ஒளிந்து வாழ்கிறார்கள்.


www.tamilarangam.net

என்பதும் எமக்கு நன்கு தெரியும்.

பல்பத்து ஆண்டுகள் சோசலிச காலங்கள் கண்ட பூமிகள்கூட எதிர்ப் புரட்சிகள் வெற்றிபெற்றுப் பேய்கள் கொண்ட நாடுகளாக இவற்றினை மாற்றிவிட்டுள்ளமையை நம் கண்களால் காண்கிறோம் என்றுகூறி எச்சரிக்கை செய்கிறார் சந்திரசூரியர்.

(வரும்)





"அம்மையாா் சொல்லிப்போட்டா மட்டுப்படுத்தப்பட்ட யுத்தமாம்?"


"ஓம், ஓம் நிலத்திற்கு மேல எந்த ஒரு உயிரினமும் உயிர்வாழக் கூடாதென்டு மட்டுப்படுத்திப் போட்டா."

www.tamilarangam.net



# புரட்சியும் புத்திமான்களும்

(ஒரு கவிதையும் வசனமும்)



அவர்கள் புத்திமான்கள்.
உறுதியளிக்கப்பட்ட
புரட்சி வருமென அவர்கள் அறிவார்கள்.
புரட்சி அழகானதெனவும் புனிதமானதெனவும்
புதிய உலகமொன்றை உருவாக்குமெனவும்
மானுடத்தை முன்னோக்கி உந்துமெனவும்
அவர்கள் அறிவார்கள்.
புரட்சி கொடுமைகளை எவ்வாறு சாய்க்குமெனவும்
புரட்சியை எவர் செய்வர் எனவும்
புரட்சி எப்போது நிகழும் எனவும்
அவர்கள் அறிவார்கள்.
புரட்சி வந்த பின்பு
எவரெவர் என்ன செய்யலாம் எனவும்
அவர்கள் அறிவார்கள்.
புண்களிற் சீழ்வழியக்
குருதி படிந்த மேனியுடன்
ஆடைகள் கிழிந்து அழுக்கேறி நாறக்
கைகளிற் கொலைக் கருவிகளுடன்
புரட்சி வந்தது.
புரட்சி இதுவல்ல என்று
புத்திமான்கள் அழுத்தந் திருத்தமாக
ஆதாரங்களுடன் வாதிட்டனர்.
ஆயினும் உலகம் மாறியது.

எப்போதாயினும் உமக்குத் தாகமேற்பட்டால் உமது தாகசாந்திக்கு வழிசெய்வேன் என்று கண்ணபிரான் அருளிய வரத்தைப் பெற்ற மகாஞானி உதங்கருக்குத் தாகம் ஏற்பட்டபோது ஒரு புலையனது தோற்பையில் அவருக்குத் தரப்பட்ட நீர் தேவாமிர்தமெனவோ, தந்தவன் தேவேந்திரன் எனவோ தெரியாததால் இதுவோ வரம் என நொந்து அமிர்தத்தை மறுத்த உதங்கரிடம் இதுவோ உமது ஞானம் என்று கேட்டாராம் கண்ணபிரான்.
(மகாபாரத உபகதையொன்றைச் சார்ந்து)

www.tamilarangam.net

# பணங்காய்ச்சி மரம்

(ஒரு கவிட்டுரை)

சிவசேகரம்



பணங்காய்ச்சி மரமேறிக் காய் பிடுங்கவும் மரத்தை உலுப்பிக் கா பொறுக்கவும் பணங்காய்ச்சி மரமிருக்கும் இடந்தேடி அவர்க எல்லாருந்தான் போனார்கள். ஆண்களும் போனார்கள். பெண்களு போனார்கள். வலியவர்களும் மெலியவர்களும் போனார்கள் கற்றவர்களும் கல்லாதவர்களும் நல்லவர்களும் அல்லாதவர்களு உள்ளவர்களும் இல்லாதவர்களுமாக அவர்கள் எல்லாருந்தா போனார்கள். பணங்காய்ச்சி மரம் டொலர், டொய்ட்ஷ் மார்க், யென் பவுண் என வண்ணவண்ணமாய்க் காய்த்துத் தள்ளியது. பணங்காய்ச் மரத்தை நாடிக் கிராமத்திலிருந்து பட்டணத்துக்குப் போனார்கள் பட்டணத்திலிருந்து பெருநகரத்துக்கும் நாட்டைவிட்டு நாட்டுக்குப் போனார்கள். நடந்தும் வண்டிகளிலேறி நகர்ந்தும் போனார்கள் கடலிலுங் காற்றிலும் மிதந்தும் போனார்கள். குதிரைகளின் முதுகில் அமர்ந்தும் வாகனங்களின் அடியிற் பதுங்கிக் கிடந்தும் போனார்கள் மின்சார வேலிகளைத் தாண்டிக் குதித்தும் பாதாளச் சாக்கடை வழியே குனிந்தும் போனார்கள். எப்படியெப்படிப் போகலாமோ அப்படியப்படியெல்லாம் பணங்காய்ச்சி மரத்தின் திசைநோக்கி அவர்கள் எல்லோரும் போனார்கள். ஊரைவிட்டும் உறவைவிட்டும் போவதை எண்ணி அழுதுகொண்டு போனார்கள். சிரித்துக்கொண்டுப் போனார்கள். சஞ்சலத்துடன் போனார்கள். சந்தேகங்களுடன் நிச்சயத்துடன், நம்பிக்கைகளுடன் போனார்கள். போன எல்லோருமே எதிர்பார்ப்புகளுடன்தான் போனார்கள். பணங்காய்ச்சி மரத்துக்கு பூசைகள், தோத்திரங்கள், பணிவிடைகள் எல்லாமே செய்தார்கள் பணங்காய்ச்சி மரம் கொஞ்சம் உண்ணவும் உடுக்கவும் கொடுத்தது தங்குவதற்கு நிழலுங் கொடுத்தது. விளையாடவும் பொழுதை போக்கவும் வழிகளைக் கொடுத்தது. பிடுங்கியும் பொறுக்கியும் எடுத் காய்களை விலையாக வாங்கிக் கொண்டது. அவர்களது சுதந்திரத்தைக் களவாடிக் கொண்டது. பணங்காய்ச்சி மரத்துக்கு சொந்த மண்ணென்று எதுவுமில்லை என்றும் அதன் வேர்க உலகெங்கும் பரவி எல்லா மண்களது வளங்களை உறுஞ்சிக் கொள்கிறது என்றும் அறியமாட்டாதவர்கள் அறிந்து சொன்னவர்க மீது எரிந்து சினந்தார்கள். பணங்காய்ச்சி மரத்துக்குப் பணிவிடை செய்வதே தங்களது பிறவிப் பயன் என்று உரத்துக் கூறினார்கள் பணங்காய்ச்சி மரத்தை நோக்கிய தங்களது பயண வீண்போகவில்லை என்று மெய்யாகவே அவர்கள் நம்புகிறார்கள் இன்னமும் பணங்காய்ச்சி மரத்தை நோக்கிப் போகிறவர்களை எல்லாருந்தான் வரவேற்கிறார்கள், எல்லோருந்தான் வழிமறிக்கிறார்கள்.

1995 யூன் 11.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னுமொரு காதலின் கதை

## புவனம்

மாலைப் பொழுதுகளின் கடற்கரை மணல் விளிம்பில் விழுந்து விழுந்து சிரித்த அலைகளுடன் பகிர்ந்த பகிடிகளையும் கவிழ்ந்து கிடந்த வள்ளங்களின் காவலுட் கைகளாற் பரிமாறிய ஸ்பரிஸ வார்த்தைகளையும் நீ திரும்பக் கேட்கவில்லை. முற்றவெளியில் எல்லோரது காதற் கதைகளையும் கேட்டுச் சுவைத்தபடி புற்றரை மீது ஊருகிற காற்றுக்குங் கேளாமற் கூறிய மௌன ரகசியங்களையும் வீதியோரமாக விரிந்து நிற்கிற மரக்குடைக்கீழ் நின்று களவாகக் கொய்த முத்தங்களையும் நீ மீளக் கேட்கவில்லை. மௌன வேளைகளின் மனத் துடிப்புக்களையும் விலகிச் செல்லலின் வேதனை மிகுந்த இன்ப எதிர்பார்ப்புகளையும் நேரத்தின் நகர்வை வெறுத்துக் கழிந்த வேளைகளின் பின் நேரத்தின் நகராமையை வெறுக்கும் ஏக்கங்களையும் நீ திரும்பக் கேட்கவில்லை. நிச்சயமான காதலின் நிச்சயமற்ற மறுநாளைப் பற்றிய ஆசை மிகுந்த அச்சங்களையும் நீ கேட்கவில்லை. ஒலியும் எழுத்தும் இல்லாது விழிகளும் இதழ்களும் வீதிகளின் இரைச்சலூடு பரிமாறும் மொழிகளையும் தற்செயலான மோதல் போன்று நிகழும் அரைகுறைத் தழுவல்களையும் வேலி மறைவுகளின் அரை நிமிடத்து அரவணைப்பின் பெருமூச்சுகளையும் நீ கேட்கவில்லை. தபாற்காரச் சிறுவனது வேர்வை நனைந்த சட்டைக்குள் மறைந்து வந்த கடிதங்களையும் நீ கேட்கவில்லை. கொண்டுவந்து தருவதாக வாக்களித்த நிலவையும் வானவில்லையும் நீ கேட்கவில்லை. கொண்டுவர மறந்த கொய்யாப் பழங்களையும் மல்லிகைப் பூச்சரத்தையேனும் நீ நினைவூட்டிக் கேட்கவில்லை. இன்னும் மீறப்பட்ட உறுதிமொழிகளையும் நீ கேட்கவில்லை. நள்ளிரவு தாண்டியும் நித்திரையை மறித்த நினைவுகளையும் அந்த நினைவுகட்கும் எட்டாத இனிமைகளையுடைய அதிகாலைக் கனவுகளை என்றாலும் கேட்பாய் என நினைத்தேன்.

இக்காதற் கதை முடிந்தது என்பதைக் கூற என் சொற்கள் தடுமாறிய வேளை, நான் வருமெனக் காத்திருந்த கண்ணீரோ சுடுசொற்களோ கெஞ்சுதலோ இல்லாமல் என்னுடன் ஒரு வார்த்தையும் வாதாடாமல் எழுந்தாய். என்னுடைய காதல் பொய் என்பது உன் தீர்ப்பு. நான் இல்லை என்பது போல என்னைத் துளைத்துத் தூரச் சென்றது உன்பார்வை. எந்தக் குண்டானாலும் அதைவிட நிச்சயமாய் என்னைக் கொன்றிருக்க முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுப்பர்

சமர் முடிஞ்சு இனி இலையுதிர் காலம் தொடங்குது. குளிர் கேட்டுக் கேளாமல் வந்திடும். (திறந்த வீட்டுக்குள்ள நாய் பூந்த மாதிரி?) தமிழ் ஆக்களில் பலரும் சலித்துக் கொள்ளுறதைத் தான் பார்த்திருக்கிறன். காரணம் இனி வெளியில வெளிக்கிடுறது எண்டா கொள்ளையக் கொண்டு போற மாதிரித்தான். ஒண்டுக்குப் பத்து உடுப்பு போட வேணும், ஆனாலும் வெளியில சுதந்திரமாகக் கன நேரம் திரிய முடியாது. குளிர். அதை விடக்கெதியா இருட்டு வந்திடும். கடும் விண்ரருக்குள்ள பின்னேரம் மூன்று நாலு மணிக்கெல்லாம் இருண்டிடும், விடியிறதுக்கும் எட்டு ஒன்பது மணியாகும். இது ஒஸ்லோ பகுதியில ஆனால் பாவம் வடக்கு நோர்வேயில சூரியனையோ வெளிச்சத்தையோ காணமுடியாது! அதே மாதிரிச் சமருக்குள்ள கிட்டத்தட்ட முழு நாளும் வெளிச்சமாக இருக்கும். இருளவே மாட்டுது! எனக்கு இலையுதிர் காலம் தான் எல்லாத்துக்கையும் நல்லாப் பிடிக்கும். ஏன் என்று கேட்காமல் அடிக்க வந்திடுவினம். என்ன காரணம் எண்டா, இலைகள் உதிர்ரதுக்கு முதல் செப்டெம்பர், ஒக்ரோபர் மாதத்தில இலைகள் எல்லாம் நிறம் மாறும். மஞ்சள், சிவப்பு, பளுப்பு எண்டு ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு மாதிரி நிறத்துக்கு ஒரு சில நாளைக்குள்ள வந்திடும். திடீரெண்டு ஆரோ பெயிண்ட் அடிச்சு விட்ட மாதிரி. இலைகள் ஒரு சில நாளைக்குள்ள உதிர்ந்த பிறகு மொட்டை மரத்தைப் பார்த்தா ஏதோ ஒரு சோகம் நெஞ்சை அழுத்துகிற மாதிரி இருக்கும். நோர்வேஜியரும் அந்த காலம்

www.tamilarangam.net

பகுதியை'திரிஸ்'. (கவலை, சோகம்) எண்டு சொல்றதைக் கேட்டிருக்கிறன்.
ஏன் இப்படி எங்கட நாட்டில (ஈழம் தான்) இப்படி சரியா பிரிச்சு மாறிற காலநிலை இல்லையே எண்டு அடிக்கடி நினைக்கிறனான். மாறி மாறி பல விதமானகால மாற்றம் இருந்தால் ஒரு மாறுதலாக இருக்குமில்லையா? நம்ம நாட்டில வருஷம் முழுவதும் கிட்டத்தட்ட ஒரே கால நிலையாக இருக்குதே (சின்னதா மாா எண்டு இரண்டு மழைத்துளியும், ஒருசில நாள் சோழகக் காத்தையும் விட்டுப் போட்டுட் பார்த்தால்...) போர் அடிக்கும் தானே எண்டு!
ஆனால் சில நேரங்களில் அதே ரொம்ப பரவாயில்லை எண்டு நினைக்க வைக்கிற பல காரணங்கள் இருக்கு. இஞ்ச நான் ஒரு விட்டில (தொடர் மாடி) குடி இருக்கிறன் மூன்று நாலு வருஷமா. ஆனால் முன் வீட்டுச் காரனின்ட முகம் எப்படி இருக்கும் என்று தெரியாது. அதே மாதிரி பக்கத்து வீட்டுச் காரனின்ட பெயர் கூட என்ன எண்டு தெரியாத ஒரு வாழ்க்கை வாழறம். நம்ம ஊரில எண்டா அந்த ரோட்டில இருக்கிற ஆக்களின்ர பெயர், சொந்த ஊர், பிள்ளை குட்டி, சாதி சமயம் எண்டு எல்லாரின்ர சாத்திரமும் ஒவ்வொருத்தரின்ர கையில இருக்கும். (அந்தளவுக்குப் போய் தோண்டிறது நவீன உலகத்தில நாகரீகம் இல்லை எண்டு பலரும் என்னைத் திட்டிறது கேட்குது. ஆனால் ஊர் யதார்த்தந்தை தான் சொன் கூடுமானவரை வீட்டுக்குள்ளயே இருந்து விடுவதால் அவர்கள் மற்றவர்களுடன் பழகும் தன்மை குறைவாகவே இருந்து வந்துள்ளதாம். அதுவே அவர்களின் கலாச்சாரமாகி விட்டதாம்.
ஆனால் அண்மையிலே ஒரு நோர்வீஜிய ஆய்வாளர் உரையைக் கேட்க நேர்ந்தது. அவான் கருத்துப்படி கலாச்சாரம் தான் காரணம் என்கிறார். ஆனால் வடக்கு நோர்வீஜியரிடம் நெருங்கிப் பழகும் தன்மை அதிகம் என்கிறார். இவர்களைத் திறந்த மனசு (open people) என்கிறார்.
இந்த நிலை பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் இருக்கிறமாா எனக்குப் பட்டது. அதாவது அவையள் அவ்வளவு நெருக்கமாக ஒப்பினாக பழகுறதில்லை எண்டு பட்டது.

இதற்கு இஞ்சத்தையான் சமூக நலத்திட்டமும் ஒரு காரணம் எண்டு நோர்வீஜியர் சிலர் சொன்னவையள். அதாவது மனுசனுக்கு அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றபி பட்டதால அவையள் தானும் தன்பாடும், டி.வி., சுற்றுப்பயணம், புத்தகம் எண்டு நிண்டிற்றினம் என்கிறார்கள்.
அதை விடப் பொதுவாக ஐரோப்பா முழுவதும் கைத்தொழில் புரட்சியும், முதலாளித்துவ வளர்ச்சியின் பின்னர் தான் இப்படி நிலை வந்தது என்கிறீனம். அதாவது உலகம் (matirialistic) சிந்தனை (பொருள், பணம் மீதான பற்று மட்டும்) எண்டு சொல்லீனம்.
இதே நிலை மற்றும் மூண்டாம் அலக நாடுகளிலேயும் நாங்கள் காணலாம். பொதுவாகப் பெரிய நகரங்களில் ஏன் கொழும்பில் கூட இருக்கு. இதைவிட யாழ்ப்பாணத்தில ரவுனுக்குள்ள இருக்குதாம். எனக்குபல நோர்வீஜியர்கள் இந்த நிலை பற்றிச் சொல்லிப் பெருமூச்சு விட்டும் கவலைப்பட்டும் இருக்கினம். இப்படிப் பல பேர் தனித்தனியாக யோசிக்கினம் எண்டு பட்டது. ஆனால இது ஒரு முழு மாற்றத்தையும் ஏன் கொண்டுவர முடியவில்லை? இஞ்ச வந்து நானும் எட்டுப் பத்து வருஷமாச்சு. எனக்கும் இந்த யோசனை அடிக்கடி வருது. நானும் feelings இல்லாத ஆளா மாறி விட்டனோ மாறிவிட்டனோ எண்ட பயம் அடிக்கடி எட்டிப் பார்க்கும். ஆனாலும் ஒரு உண்மையைச் சொல்லத்தான் வேணும். முந்தியோட ஒப்பிடும் போது எனக்கே தெரியுது என்னட்ட ஒருவகையான குறைஞ்ச feelings தான். பந்த பாசம் தான் இருக்கு எண்டு இப்படிப் பல தமிழ் ஆக்களும் கதைக்கேக்க சொல்லக் கேட்டிருகிறன். இது ஏன் இப்படி வருது?.

## நாட்டில சமாதானம்

நாட்டில சமாதானம் வருது எண்ட உடன எனக்கும் சந்தோஷம் தான். உண்மையான தமிழர் பிரச்சனை தீர்ந்தால் யாருக்குத் தான் சந்தோஷம் வராது. அங்க இருந்து வாற கடிதங்களிலேயும் சமாதானமும் நிம்மதியும் வாறதெண்டு சொந்தக்காரர்களும் நண்பர்களும் எழுதினம். அங்க சனத்திண்ட கஷ்ரம் அவையளுக்குத் தான் விளங்கும். பத்து

www.tamilarangam.net

வருஷமா குண்டுக்கு ஏங்கி சாப்பாட்டுக்குக் கஷரப்பட்டு.... முருகா இனி இப்படி வேண்டாம்! சரி அது போகட்டும் ஊரில நிலை இப்படி எண்டா, இஞ்ச வெளிநாட்டில எப்படி? பலருக்கு ஊரில சமாதானம் வந்தா நல்லது எங்கட சகோதரங்கள், அப்பா, அம்மா, சொந்தக்காரர், நண்பர்கள், ஊர்சனம், முழுதமிழ் சனமும் நிம்மதியா இருக்கும் எண்டு நியாயமா சிந்திக்கினம். சமாதானம் வந்தா ஊரோட போய் இருக்கலாம். வெளிநாடும் ஒரு வாழ்க்கையா? தனிமை.... எங்களை வாட்டுது. காசு பணத்திற்கு மேலால வாழ்க்கை சந்தோஷம் எண்டது இஞ்ச துளியும் இல்லை. அடைபட்ட வாட்க்கை. தாய் சகோதரத்தை விட்டு இஞ்சையும் கடிதம் போன் வரேக்க அதுகளுக்கு என்னவோ எண்டு பயந்து பயந்து வாழுறதை விட நிம்மதியா கஞ்சிய குடிச்ச அதுகளுக்குப் பக்கத்தில போய் இருக்கலாம் எண்டு.... ஆனால் வேறு சிலருக்கு அப்படிப் படுகுது. சமாதானம் வந்தா எங்களை இருக்கிறது அனுப்பிப் போடுவாங்கள் எண்டு. கொழும்பில் குண்டு வைக்க மாட்டாங்களா எண்டு, இன்னொரு கலவரம் வந்தா நல்லது எண்டும் முந்தி சொல்லக் கேட்டிருக்கிறன். ஆண்டவா இப்படியும் சனங்களா எண்டு யோசிக்கின்றனான். அந்த சனத்தின்ர அழிவில கஷரத்தில நாங்கள் வாழ வேணும் என்று நினைக்கிற மனப்போக்கு எவ்வளவு விகாரமானது....சீ...

இப்ப நிலமை கொஞ்சம் மாறிப் போச்சு. பலருக்கு நிரந்தர வதிவிட அனுமதி கிடைச்சிட்டுது. அதை விட இப்ப பலருக்கு சிற்றிசன் கிடைச்சிட்டுது. அதால இப்ப பலர் சமாதானம் வந்தா ஊருக்குப் போய் பிள்ளைகளைப் படிப்பிக்க விடலாம், காசோட போனால் பிஸினஸ் செய்யலாம் எண்டினம். ஆனால் ஒரு சிலர் காசு பணத்தோட போய் நாங்கள் ஆறெண்டு ஆக்களுக்குக் காட்டலாம் எண்டினம். அங்க போரால கஷரப்பட்ட சனம், இனி இவையளால காசு பணத்தால, வறுமையால கஷரப்படப் போகுது. இனி இன்னொரு போராட்டம் தொடங்கப் போகுது....

இதைவிட ஒரு சிலர் சமாதானமே வரக்கூடாது எண்டது. அதுவும் எங்க வரப் போகுது எண்டு

அண்மையிலே ஒரு நோர்விஜிய ஆய்வாளர் உரையைக் கேட்க நேர்ந்தது அவரின் கருத்துப்படி கலாச்சாரம் தான் காரணம் என்கிறார் ஆனால் வடக்கு நோர்விஜியரிடம் நெருங்கிப் பழகும் தன்மை அதிகம் என்கிறார். இவர்களைத் திறந்த மனசு (open people) என்கிறார். இந்த நிலை பொதுவாக ஐரோப்பிய நாடுகளில் இருக்கிறமாதிரி எனக்குப் பட்டது. அதாவது அவையள் அவ்வளவு நெருக்கமாக ஒப்பினாக பழகுறதில்லை எண்டு பட்டது. இதற்கு இஞ்சத்தையான் சமூக நலத்திட்டமும் ஒரு காரணம் எண்டு நோர்விஜியர் சிலர் சொன்னவையள். அதாவது மனுசனுக்கு அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப் பட்டதால அவையள் தானும் தன்பாடும், டிவி, சுற்றுப்பயணம், புத்தகம் எண்டு நிண்டிற்றினம் என்கிறார்கள்.

நாகரீகமா சொல்லினம். அதற்குக் காரணம் தங்கட திரில் போயிடும். சமூகத்தில தாங்கள் முன்னுக்கு நிக்க முடியாது. நிழல் அதிகாரம் தம்மட்ட இருந்து போய்விடும், சமூக ஸ்ரேற்றஸ் இல்லாமல் போய்விடும் எண்டு தான்.

இதெல்லாம் நினைச்சு கவலை தான். நல்லூர் முருகா நீ தான் எங்கட சமூகத்தைக் காப்பாத்த வேணும்...

www.tamilarangam.net

# ஆயிரம் பூக்கள் மலராட்டும்

## பெண் அடிமைச் சமுதாயம் நோக்கிப் புலம்பெயர்ந்த பெண் ஆசிரியர்கள்

● *முல்லை*

கடந்த ஒருசில மாதங்களுக்கு முன்பு நோர்வேயில் தமிழர் வாழுகின்ற பல பாகங்களிலும் வாணிவிழாக் கொண்டாடப் பட்டது. கல்விக்குத் தெய்வமென்றும், கலைகளுக்கு அரசி என்றும் போற்றி வணங்கப் படுகிற சரஸ்வதி அன்னையை மகிழ்விப்பதற்காக விழா எடுக்கும் இந்நாளே வாணிவிழா என அழைக்கப் படுகிறது.

இவ்விழாவானது அதிகமாக மாணவர்களாலும், ஆசிரியர்களாலும் பாடசாலைகளில் கொண்டாடப் படுவது குறிப்பிடத் தக்கது. ஆனால் புலம்பெயர்ந்து வாழும் தமிழர் தாம் வாழும் இடங்களில் சங்கங்கள் அமைத்துச் சங்கங்கள், கழகங்கள் ஊடாக மாணவர்களையும், ஆசிரியர்களையும் மையமாகக் கொண்டு இவ் விழாவைக் கொண்டாடுகின்றனர். இவ்விழாவில் ஓர் சிறப்பான அம்சம் என்னவெனில் பாடசாலைச் சிறுவர் சிறுமியர்க்கு ‘ஏடு தொடக்குதல்’ என்ற சம்பிரதாயபூர்வ வைபவம் அல்லது நிகழ்ச்சியாகும். ஓர் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு முதன்முதல் கல்வியை ஆரம்பித்து வைக்கும் நிகழ்ச்சியே ஏடு தொடக்குதல் என அழைக்கப் படுகிறது. அதாவது கல்வி என்ற ஒளியை ஆசிரியர் மூலமாக மாணவன் என்ற விளக்கிலே தீபமாக ஏற்றி வைக்கின்ற சம்பிரதாய நிகழ்ச்சியே ஏடு தொடக்குதல் எனக் கூறலாம்.

தமிழர்கள் செறிவாக வாழ்கின்ற ஓர் சிறிய கிராமத்திலே, கிட்டத்தட்ட எழுபதுக்கு மேற்பட்ட மாணவர்கள் அங்கே கல்வி கற்கிறார்கள். இக் கிராமத்திலே இவ் வருடம் வாணி விழாவானது மாணவர்களால் கொண்டாடப்பட வேண்டும் என்று தமிழ்ச் சங்கம் முடிவு செய்தது. இதன் விளைவாகக் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் மாணவர்களைக் கொண்டு பயிற்றுவிக்கப் பட்டதோடு நிகழ்ச்சிகள் அனைத்தும் முற்றுமுழுதாகவே விழாவின் நோக்கங்களையும் கருத்துகளையும் மையமாகக் கொண்டு காணப்பட்டது. இக் கிராமத்திலே தமிழ் மொழியைப் போதிக்கும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியையாக ஒரு தமிழ்ப் பெண் காணப் பட்டதால் அந்த ஆசிரியையே மாணவர்களுக்கு ஏட்டைத் தொடக்கி வைக்க வேண்டும் என்ற தமிழ்ச் சங்கத் தீர்மானமானது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் பெற்றோர்களும் மாணவர்களும் தமிழ்ச் சங்க நிர்வாகிகளும் அந்தப் பெண்ணின் பாதம் பணிந்துநின்று ஏடு தொடக்குதல் என்ற வைபவத்தை ஆரம்பித்து வைக்குமாறு அழைப்பு விடுத்தார்கள்.

மறுநாள் அந்தப் பெண் ஆசிரியரின் பக்கத்தில் இருந்து பலவிதமான கருத்துகள் விவாதங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டன. இந்துமத சம்பிரதாய கலாச்சார முறைப்படி பெண்கள் முன்னின்று நல்ல நிகழ்ச்சிகளையும், நல்ல காரியங்களையும் நடாத்தக் கூடாதாம். ஆகவே ஓர் ஆண்மகன் அந்த நிகழ்ச்சியை முன்நின்று நடாத்தி வைக்கட்டும் என்று கூறியது மட்டுமல்லாமல் அந்தத் தமிழ் ஆசிரியை வாணிவிழா நிகழ்ச்சிக்குக் கூடச் சமூகம் கொடுக்கவில்லை. இந்த உண்மைச் சம்பவத்தின் ஊடாகப் பெண் அடிமைச் சமுதாயம் ஒன்று புலம்பெயர்ந்து வாழுகின்ற எம்மவர் மத்தியில் வளர்ந்து வருவதைக் காணலாம். சடங்குகள், சம்பிரதாயங்கள், கலாச்சாரங்கள் என்று கூறிக்கொண்டு பெண்கள் தாமாக ஒதுங்குவதை அல்லது ஓர் ஆணாதிக்க சக்தியின் மூலம் ஒதுக்கி வைக்கப்படுவதை இச் சம்பவத்தில் இருந்து என்னால் காண முடிகிறது.

இந்துமத கலாச்சார சம்பிரதாய முறையானது பெண்கள் தீண்டத் தகாதவர்கள் என்றும், ஒரு பெண் ஆசிரியர் முன்னின்று ஏடு தொடக்குவதை மறுக்குமாக இருந்தால் கல்விக்குத் தெய்வம் என்றும் கலைகளுக்கு அரசி என்றும் போற்றி வணங்கப்படும் சரஸ்வதி அன்னை ஓர் பெண் தெய்வம் என்பதை அந்தப் பெண் ஆசிரியர் சார்பில் நின்று விவாதித்தவர்களும், இந்துமத கலாச்சாரப் பழமைவாதிகளும் உணரவேண்டும். கல்விக்குத் தெய்வமாக ஒரு பெண்ணை இந்து மதத்தவர்கள் வழபடலாம். ஆனால் அந்தப் பெண் தெய்வத்துக்கு விழா எடுத்துக் குழந்தைகளுக்குக் கல்வியை ஆரம்பித்து வைக்கும் (ஏடு தொடக்கல்) நிகழ்ச்சியைப் பெண்கள் முன்னின்று நடாத்தக் கூடாது என்று கூறுவது என்ன நியாயம்?

இந்துமத கலாச்சாரமும் இந்துமத சம்பிரதாயமும் பெண் ஆசிரியர்கள் ஏடு தொடக்குவதை மறுக்குமாக இருந்தால் பெண்கள் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதை ஏன் அனுமதிக்கின்றது? இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களாகப் பெண்கள் நியமிக்கப் படுவதைக் காணலாம். இங்கு பெண் ஆசிரியர்களால்தான் குழந்தைகள் கல்வி ஆரம்பித்து வைக்கப் படுகிறது.

இன்று புலம்பெயர்ந்து வாழும் எமது தமிழ்ப் பெண்கள் மத்தியில் ஆண்களுக்குப் பெண்கள் எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்ல, தாழ்ந்தவர்கள் அல்ல என்ற கருத்துகளும், சிந்தனைகளும் வலுப்பெற்றுக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் தம்மைத் தாமே படித்தவர்கள், பண்புள்ளவர்கள், பகுத்து அறிகின்ற சக்தி கொண்டவர்கள் என்று வர்ணித்துக் கொள்ளும் பெண்களும், அப் பெண்களின் கருத்துகளுக்குச் சிறப்பாகப் பெண் அடிமைக் கருத்துகளுக்குத் துணை நிற்கின்ற பக்கதாரிகளும் பாரதியைப் பற்றி அல்லது பெண் விடுதலைக்காகப் பாரதி கூறிய கருத்துகளைப் பற்றிப் பத்து நிமிடமாவது படித்துவிட்டுத் தமது கருத்துகளை முன்லைக்க வேண்டும்.

புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலே வாழுகின்ற குழந்தைகளை, சிறப்பாகப் பெண் குழந்தைகளை வழிநடாத்த முற்படும் பெண் ஆசிரியர்கள் பெண் அடிமைத் தனத்திலிருந்தும், பிற்போக்கான சிந்தனைகளில் இருந்தும் விடுதலை அடைய வேண்டும். காரணம் இப்படிப்பட்ட ஆசிரியர்களின் வழிநடாத்தலுக்கு உட்படும் பெண் குழந்தைகள் மத்தியிலும் இப்படியான சிந்தனைகள் வளரமாட்டாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது. ஒரு குழந்தையின் வாழ்க்கையிலே ஆசிரியரின் கருத்துகள் பாரிய அளவில் தாக்கத்தையும், மாற்றத்தையும் ஏற்படுத்தும். ஆகவே ஒரு சமுதாயத்தை வழிநடத்த முற்படுகிறவர்கள் சிறப்பாக ஆசிரியர்கள் சில மூடநம்பிக்கைகள், மூடக் கருத்துகள் போன்றவற்றில் இருந்து விடுபடுவதோடு அடிமைமுறைச் சமுதாயத்தில் இருந்து முழுமையாக விடுதலை அடைய வேண்டும். அப்பொழுதுதான் எமது குழந்தைகள் எதிர்காலத்தில் விடுதலை அடைந்த குழந்தைகளாகக் கல்விமான்களாகத் திகழ்வார்கள்.●




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்மனம்

க.ஆதவன்



[illegible]

அத்தியாயம் 15

ரகுநாதனுக்குத் தாடி நன்றாக வளரவில்லை. என்றாலும், சலூனை நாடிச் சென்றான்.

தன்னால் மறக்கப்பட்ட.....

தன்னால் துறக்கப்பட்ட....

காதலை,

இதே சலூனில் வைத்துத்தான் -

கந்தவன மாஸ்ரர் தொடக்கி வைத்தார். அவர் சிலவேளை வரக்கூடும்.

அவரிடம் சில 'அட்வைஸ்' கேக்கலாம்.

'என்னைப் பழையபடி இருக்க விடுங்கோ மாஸ்ரர்.

எனக்கும் இந்த மாதிரியான விஷயங்களுக்கும் வெகுதூரம்.

நான் - நண்பனாயும் இல்லாமல் ..... எதிரியாயும் இல்லாமல் ...... துரோகியாயும் இல்லாமல் சாதாரண ஒரு 'கிளாக்'காய்.....

சாதாரண ஒரு 'சிவில் சேவன்ராய்'.....

சாதாரண ஒரு ரகுநாதனாய்....

அம்மாவுக்குப் பிள்ளையாய்...

வாழ்ந்துவிட்டுப் போறேனே....!

Please என்னை விடுங்கோ'

என்று அவரைப் பார்த்துச் சொல்லவேணும் போலிருந்தது ரகுநாதனுக்கு!

மாலை 3.00 மணி.

சிலவேளை அவள் ஸ்கூல் முடிந்து ஆடி ஆடி வரக்கூடும்.

அவள் வந்தால் என்ன?

வராவிட்டால் என்ன?

அவள்தான் என்னவள் இல்லையோ!

எங்கோ வெகுதொலைவில் நூலறுந்த பட்டம் போல் போய்க் கொண்டிருக்கிறாள்.

அவளுக்காய்க் காத்திருப்பதில் என்ன நன்மை எனக்கு?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கந்தவன 'மாஸ்ரர்' எனக்குச் சில அருளுரைகள் கிருபானந்த வாரியார் போலச் சொல்லக்கூடும். அவருக்காகவும் காத்திருப்பதில் பயனில்லை.

ரகுநாதன் வெளியேறினான். சலூன் தம்பித்துரை ஓடிவந்து,

"இப்பதான் வந்தனீர். அதுக்கிடையில வெளிக்கிட்டா என்ன மாதிரி?" என்று கேட்டார்.

"இல்லைத் தம்பித்துரை அண்ணை. தாடி வளர்ந்திட்டுது எண்டுதான் யோசிச்சனான். இப்ப பார்க்க வளரேல்லப் போலை கிடக்கு. நாளைக்கும் சலூன் திறக்குந்தானே? நாளைக்கு வந்து வழிப்பம் எண்டு யோசிச்சன்" என்றான்.

"தாடிக்கு மட்டுமில்லை. எல்லாத்துக்கும் எதிர்காலம் எண்டு ஒண்டு இருக்குத் தம்பி" என்றார்.

ரகுவிற்கு மேலும் எரிச்சல் வந்தது.

இனி இநத இடத்திலை நிற்கக் கூடாது.

'எல்லாருக்கும் நான் ஒரு போடுதடியாய்ப் போனேனோ?' என்ற ஒரு சந்தேகம் அவனை அரிக்கத் தொடங்கியது.

விறுவிறென்று சலூனை விட்டு வெளியேறினான்.

கொயிலடி மடத்திலை கொஞ்ச நேரம் இருக்கலாம் என்று யோசித்தான்.

நடக்கத் துடங்கினான்.

தூரத்தில் –

யாரைக் காணக் கூடாது என்று நினைத்தானோ அவள் வந்துகொண்டிருந்தாள்.

'திரும்பி எதிர்த் திசையில் நடக்கலாம்' என ஒருகணம் மனதில் ஓடிற்று.

எதிரே நடந்தால் என்ன?
நடக்காமல் விட்டென்ன?
ஒரே திசை என்ன?
எதிர்த் திசை என்ன?
துடுப்பிழந்த ஓடத்திற்கும்
நூலறுந்த பட்டத்திற்கும்
வாளி இழந்த குத்தர மாடுகளுக்கும்
எது கதி? எது திசை?

ஒன்றுமே அறியாதவன் போல், தன்னெதிரே தன் சுசீலா வருவதைத் தான் சட்டை செய்யாதவன் போல், தனக்கும் அவளுக்கும் இந்த ஊருக்கும் எந்த விதமான தொடர்புமே இல்லாததுபோல், நடக்கின்ற கலையை அவன் எங்கிருந்து பெற்றானோ? நடந்துகொண்டிருந்தான்.

இந்தப் பாவியும் இண்டைக்கெண்டு நீலச்சீலையா கட்டிக்கொண்டு வரவேணும்?

ரகுவின் கால்கள் மேலும் 'பக்கிள்' அடிக்கத் தொடங்கின.

இதோ!

வந்திட்டாள்!

இனி அவள் கடந்து போய்விடுவாள்.

விட்டது தொல்லை.

பேசாமல் வீட்டை போய்ப் படுத்தால் தொலையும் நினைவுகள்.

"என்ன ரகு, அரை மணித்தியாலம் கதைப்பம் எண்டியள், நான் ஒரு மணித்தியாலம் கதைப்பம் எண்டன. உடனை விருப்பம் இல்லை எண்டிட்டு ஓடிட்டியள். என்ன நடந்தது உங்களுக்கு"

என்று கேட்டாள் சுசீலா.

வானவெளியில் உள்ள நட்சத்திரங்கள் எல்லாம் திடீரென்று பொலுபொலுவென்று மண்ணிற் கொட்டினால், கூட்டி அள்ளுறது எவ்வளவு சுகமான துக்கமோ அவ்வளவு துக்கமான சுகத்தை அண்டைக்குத்தான் ரகுநாதன் வாழ்நாளில் அனுபவித்தான்.

சுகம்.

அற்புதமான சுகம்.

நேரெதிரே நீலச் சேலையில் என்னவள்!

எனக்காய்.

என் வார்த்தைகட்காய்..

காத்துக் கிடக்கிறாள்.

ரகு! கேள். கேட்டுவிடு.
'நீ என்னவள்தானே' என்பதை!
ஒரே நொடியில்...
ஒரே கணத்தில்...
கேள்.. ரகு.. Please.
வாய்திற.
உதடுவிரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெடித்துச் சிதறு.

இதயத்தால் குருதி பீறிடட்டும்.

நரைமயிர் கண்ட உன் தாடி மயிர்மீது ஆணையாய்

காலங்காலமாய் நீ

காத்துவந்த

அந்தப் 'போக்கணங்கெட்ட' காதல்மீது ஆணையாய்...

உன்னைக் குத்தி உன்னுள்ளேயே துருப்படித்துச்

சீழ்வடியும்

உன் புண் மீது ஆணையாய்

கேள்!

அவளிடமே கேள்!

ரகுநாதன் கேட்கவில்லை. அவனால் ஏனோ முடியவில்லை. கால்கள் தள்ளாட நடந்துகொண்டிருக்க வேணும் போலிருந்தது.

"ரகு"

சற்றுப் பலமாய்த்தான் கேட்டது அவளது குரல்.

நின்றான்.

"நான் உங்களோடைதான் கதைக்கிறன்" என்றாள்.

"என்ன சொல்லுங்கோ?" என்றான் ரகு.

"நான் கதைக்கிறதும் பாடுற சங்கீதமும் என்ரை இந்தப் போக்கும் சத்தியமாய் உங்களுக்கு விளங்கேல்லையா?"

"சுசீலா... நீங்கள்.."

"வளங்கிச்சுதோ விளங்கேல்லையோ?"

பேசாமல் நின்றான் ரகு.

"ரகு அரச மரத்தடியில நிண்டு கதைப்பம். நான் முன்னாலை போறன், பிறகு வாங்கோ" என்றுவிட்டு வேகமாய் நடந்தாள்.

நடைப்பிணம் போல் பின்தொடர்ந்தான்.

## இங்கும் இருக்கிறது!!

நோர்வேயில் ஊழல் இல்லை என்று யாராவது சொன்னால் யாரும் நம்பிவிடாதீர்கள். எங்கள் நாட்டில் இருக்கும் அளவில், மட்டத்தில் இல்லாவிட்டாலும், இங்கும் கணிசமாக இருக்கிறது. குறிப்பாகத் தொழில்துறையில் ஊழலைக் கண்டபடி சந்திக்கலாம். அண்மையில் உலகின் 41 நாடுகளில் எடுக்கப்பட்ட ஒரு கணிப்பீட்டின்படி ஊழல் குறைந்த நாடுகளில் நோர்வே பத்தாவது இடத்தில் உள்ளது. அயல் நாடுகள் ஓரளவு நல்ல நிலையில் உள்ளன. உலகிலேயே ஊழல் குறைந்த நாடாகக் கணிக்கப்படும் நாடு நியூஸிலாந்துதான். இதையடுத்து டென்மார்க், சிங்கப்பூர், பின்லாந்து, கனடா, சுவீடன், அவுஸ்திரேலியா, சுவீற்சர்லாந்து, ஒல்லாந்து என்பன உள்ளன. இந்தப் பட்டியலில் ஊழல் மிக மோசமாக உள்ள நாடுகளாகப் பாகிஸ்தான், சீனா, இந்தோனேசியா என்பன குறிக்கப் பட்டுள்ளன. ஊழலுக்கு எதிரான உலக அமைப்புகளில் ஒன்று (Trancparency International) இந்தக் கணிப்பீட்டை வெளியிட்டுள்ளது.

மாது

www.tamilarangam.net

"இப்ப சொல்லுங்கோ. என்ன கதைக்க வேணும் எண்டு சொன்னனியள்?"
கேட்டாள்.
"சுசீலா, நீங்கள் என்ரையோ?" (அப்பாடா இப்போதாவது முடிந்திருக்கிறது. மூதேசி. இதைக் கேக்க இத்தினை வருசம். இத்தினை பிளான்)
"இல்லை"
"அப்ப அந்தப் பெடியளின்ரையோ?"
"எந்தப் பெடியளின்ரை?"
"அண்டைக்கு SMGஒடை வந்து எங்கடை சுசீலாக்காவின்ரை விஷயத்திலை தலையிடாதை எண்டு வெருட்டிப் போட்டுப் போன பெடியள்"
"நான் அப்பிடிச் சொல்லேல்லை"
"அப்ப ஏன் அவங்கள் அப்பிடிச் சொன்னவங்கள்?"
"அது அவங்களையெல்லோ கேக்கவேணும்"
"சுசீலா, Please சத்தி வளைக்காதையுங்கோ. அப்பிடி ஏதாவது இருந்தாலும் உங்களோடைதான்"
"உப்பிடிச் சொன்னாக்களும் சொல்லுற ஆக்களும் அதிகம்.
ரகு!
நான் சுத்தி வளைக்கேல்லை.
உங்களுக்கு என்ன வேணும்? என்ரை வாயாலை - ஊர் அறிய நான் உங்களுடையவள் எண்டு சொல்ல வேணும். அவ்வளவுதானே. எந்த மேடையிலை வந்து சொல்லச் சொன்னாலும் நான் சொல்லத் தயாராய் இருக்கிறன்.
நான் உங்கன்ரைதான்.
ஆனா, இதிலை... என்ன இருக்கு ரகு? எங்கடை காதல் இவ்வளவு மலிவாகவா விலைப்பட வேணும்? நீங்கள் ஏன் இதற்காகக் காத்திருந்தீர்கள்?
நீங்கள் ஏன் சாதாரண மனித முகம் நீட்டிறியள்?
நீங்கள் ஏன் உங்கடை தரத்திலை இருந்து இறங்கிறியள்
நான் உங்களை ஒரு முலைக்கோட்டையில்.... அதுவும் ஒரு வெள்ளி மணிகள் பொருத்திய ஒரு மலைக் கோட்டையின் ராசகுமாரன் எண்டெல்லோ நினைச்சிருந்தன்.
திடீரெண்டு ஒருநாள் வந்தியள். என்ரை நீலாம்பரி வேணுமெண்டியள். நீலாம்பரி என்ன ரகு, நான் கற்ற அத்தனை தாலாட்டுகளும் உங்களுக்காகத்தானே!
மனசில உங்களை நினைச்சு நான் வாடும்பொழுதெல்லாங் கைகொடுக்கிற -
'குழலூதி மனமெல்லாம்
கொள்ளை கொண்ட'
காம்போதி ராகப் பாடல்... நான் அடிப்படைச் சங்கீதத்தில் தேறியதுக்கு ஒரு சாட்சியாகும்.
நீங்கள்தான் ரகு.... என்ரை எல்லாத்துக்கும் நீங்கள்தான் ரகு.
வெக்கங் கெட்டுப்போய்...
நான் மனந்திறந்து இண்டைக்குச் சொல்லுறன்.
நான் உங்கன்ரை.
நான் உங்கன்ரை"
பொரிந்து தள்ளிவிட்டு விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள். முன்னாலிருந்த புற்களைப் புடுங்கிப் புடுங்கி.... எறிந்துகொண்டிருந்தாள். அவ்வப்போது மூக்கை உறிஞ்சி... தன் அழகிய நீலச்சேலையைப் பாழாக்கிக் கொண்டிருந்தாள் சுசீலா.
ரகு, அதிர்ந்து போனான். என்மேல் இவ்வளவு இவ்வளவு இவ்வளவு இவ்வளவு காதல் கொண்டவளா என்னைப் புறந்தள்ளினாள்
மேனி எல்லாமே.... ஒவ்வொரு இரத்த நாளத்திலும் நாடியிலும்... கலங்களிலும் பூரிப்பு. மகிழ்ச்சி. ஆரவாரம். உந்தல். ஆர்ப்பரிப்பு.
எனியும் எனக்கு என்ன வேணும்?
சுசீலா நான் பாவி.
என்ரை கிளியை... என்ரை குயிலைச் சந்தேகத்தில் கெடுத்துக் கொண்ட பாவி.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீ மலைக்கோட்டையில் - அதுவும் தங்க மணிகள் கொண்ட மலைக்கோட்டையின் இளவரசி. நான் இனிப் போக மாட்டேன். கதைக்க மாட்டேன். இந்த எழிலரசியைப் பாதுகாப்பதுதான் என் தொழில்.

ரகுநாதன் பேய் பிடித்தவன் போல் - அவளையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நீண்ட பெருமூச்சை அவள் விட்டுக்கொண்ட போது அவளது நெஞ்சும் மேல்கீழாய் இலகுவாகியது.

"சரி, இதுக்குமேலை என்னாலை ஒண்டையுந் திறந்து காட்டேலாது. இனி, உங்கடை விருப்பம். நான், உங்கன்ரைதான். ஆனா நீங்கள் என்ரை ரகுவாக வரவேணும்"

கண்ணீரும், விசும்பலும் பொத்துக்கொண்டு மீண்டும் ஒரு முறை அவள் அழகைச் சிதைத்தன.

எழுந்தாள்.

நடந்தாள்.

ஒரு ராஜகுமாரியின் மிடுக்குடனும்,

மையலுடனும், சோகத்துடனும்.

ரகுநாதன், ஒரு கலைஞன் தான் படைத்த படைப்பே தனக்கு எதிரியாய் நிற்கும்பொழுது எப்படித் துன்புறுவானோ அதுபோல் விரக்தியில் விரல் நகம் சப்பினான்.

(வரும்)





டென்மார்க்கில் இருந்து
வெளிவரும் புதிய படைப்பு
ஆசிரியர்:
கவிஞர் வேலூர் ஸ்ரீதரன்
பிரதி ஒன்றின் விலை: **Kr.20,-**

பிரதிகளுக்கு தொடர்பு
கொள்ளவும்:
**Sritharan . V**
**Marselevej 23, 2 tv**
**5700 Svendborg**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

.கள்ளன்.

நவம்பர் 6ம் திகதி சுவடுகள் சார்பில் நடைபெற்ற சிறுவர்களுக்கான போட்டிகளில் பங்குபற்றியோரில் சித்திரப் போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தைப் பெற்ற கவிதா விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்த போது



கேள்வி: சுவடுகள் சார்பில் நடாத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிச் சிறப்பித்தமைக்கு நன்றி. சித்திரப் போட்டியில் முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்ட உங்களிடம் ஒரு சில கேள்விகள் - உங்களுக்கு சித்திரம் வரையும் கலையில் ஆர்வம் ஏற்பட்டமைக்கான காரணத்தைக் கூற முடியுமா?

பதில்: சித்திரம் வரையும் கலையில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது என்பது எனக்கே தெரியவில்லை. ஆனால் சின்ன வயது முதல் ஏதாவது ஒரு நல்ல படத்தைப் பார்த்தால் அதை அப்படியே கீறிப்பார்ப்பேன். கலர் பண்ணிப் பார்ப்பேன். அது அப்படியே ஆர்வமாக மாறிவிட்டது.

கேள்வி: சரி, இனி வரும் காலத்தில் அவ்வார்வத்தை எப்படி அபிவிருத்தி செய்யப் போகிறீர்கள்?

பதில்: நான் இதுவரை அபிவிருத்தி செய்வதைப் பற்றி யோசிக்கவில்லை. எனக்கு இன்னமும் என்ர படங்களில் பெரிதளவு திருப்தியில்லை. எனக்குத் திருப்தி வரும் வரை நான் முயற்சி செய்து கொண்டிருப்பேன். அதன் பிறகு தான் அபிவிருத்தியைப்பற்றி யோசிக்க முடியும். ஆனால் எனக்கு Artist ஆக வர விருப்பம் இருக்கிறது.

கேள்வி: என்ன மாதிரியான ஓவியங்கள் உங்களுக்கு விருப்பமானவை..?

பதில்: எனக்கு modern art ஓவியங்கள் தான் விருப்பம். எனக்கு எப்படிப் பாகுபடுத்துவது என்று தெரியவில்லை. இயற்கைக் காட்சிகளைக் கீறுவதை விட modern artவிருப்பமானது.

என்று தனது பேட்டியை முடித்துக் கொள்கிறார்.

www.tamilarangam.net

*mottaker:/ To*

**C**

**POST**


**Av sender : (From)**
***Norway Tamil Culturel Centre***
**Address:**
***Suvadugal,***
***Herslebs gt43,***
***0578 Oslo,***
***NORWAY***



**SUVADUGAL,**
**A Tamil monthly from Norway**
Estd: Sept.1988

**Bank account:** 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

**Editorial Group**: Thuruvapalagar

Price: 25NKr
Subscription: 300NKr/ 12 issues

**Published by:**
Norway Tamil Culturel Centre
**Address:**
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

சுவடுகள்,
தமிழ் மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி 1988

வங்கிக் கணக்கிலக்கம்: 16075213062
ஸ்பாரபாங்கன் நூர்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

தனிப்பிரதி விலை: 25 குறோணர்கள்
சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்
முகவரி:
சுவடுகள்,
ஹேர்சிலப்ஸ் காதா 43,
0578 ஒஸ்லோ,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்